காஞ்சி

ஆசிரியர்
அண்ணாதுரை



17-7-66
விலை 20 காசு

கேள்வி--பதில்!

(1) 'ஒரு வேளை உணவுத் தவிர்ப்பு'த் திட்டம் எப்போது நீங்கும்?

காங்கிரசாட்சி அகற்றப்படும் போது.

(2) இந்திய ரூபாய் மதிப்புக் குறைப்பு எந்தெந்த நாட்டுக்குப் பொருந்தும்?

தற்போதுள்ள நிலவரப்படி அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் மட்டுமே என்று தெரிகிறது. ஏனென்றால், ரஷ்யாவுக்கு ஏற்றுமதிப் பொருள்களின் விலையைப் பழைய ரூபாய் மதிப்புப்படியே ஏற்றுமதி செய்யும்படி இந்திய அரசு, இந்திய வணிகர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறது!

(3) வியட்நாம் போரின் பொருள்தானென்ன?

தெற்கு வியட்நாமிய மக்கள், பூரண சுதந்திரத்துடன் வாழ வேண்டுமென்று அமெரிக்கா ஆசை வைத்து விட்டதாம். இராணுவ தளங்களையோ, பிற பிடிப்புக்களையோ தெற்கு வியட்நாமில் எப்போதும் வைத்துக் கொண்டிருக்க விரும்பவில்லை யென அமெரிக்காவின் ஐ. நா. பிரதிநிதி கோல்டுபர்க் கூறுகிறார்! தெற்கு வியட்நாமிய பிரச்னைக்காக அமெரிக்கா இதுவரை கொடுத்துள்ள விலை **9000 கோடி ரூபாயாம்!**

(4) டில்லித் தலைநகரிலிருந்து காங்கிரஸ் கட்சியின் நடவடிக்கைகளை வேடிக்கைப் பார்ப்பேன் என்று கூறிய டி. டி. கே. இப்போது காங்கிரசுக்காகப் பரிந்து பேசுகிறாரே!

தவறான கணிப்பு ஐயா! வேடிக்கைப் பார்ப்பேன் என்று கூறிய அவர், இப்போது இந்திய அரசுக்கு, வேடிக்கைக் காட்டுகிறார்; இது கண்டு காமராஜ் கொதித்துக் கிடக்கிறார்! நீர் இதனை வேடிக்கைப் பாருமே!

(5) ரூபாய் மதிப்புக் குறைப்பையும் கழகத்தையும் இணைத்து ஒரு தமிழக இதழ், கேவலமாக எழுதி இருக்கிறதே கவனித்தீர்களா?

"கேவல"த்தையே இதழின் இலட்சியமாகக் கொண்டு வெளிவரும் அந்த ஏட்டிடமிருந்து வேறெதனை எதிர்பார்க்கிறீர்? கேவலமான — பொய்யான செய்திகளைப் பிரசுரித்தே பரபரப்படைய நினைக்கிறது அவ்வேடு. தலைப்பின் இயல்பிற்கேற்ப ஆர்ப்பரித்துக் கொண்டிருப்பதைக் கண்டு நீர் கவலைப்படத் தேவையில்லை. கடமையில் கவனத்தைச் செலுத்துங்கள் — கொள்ளியை இழுத்தால், கொதிப்படங்கிப் போகும்!

(6) தெற்கு வியட்நாமில் அமெரிக்கத் தலையீடு எதனால் என்று கூறுவீர்களா?

பன்னெடுங் காலத்திற்கு முன்னர் **மார்ஷல் திட்டம்** என்றொரு திட்டத்தை அமெரிக்கா கண்டது. அதனை ஒப்புக்கொண்டு கையெழுத்திட்ட எந்த ஒரு நாட்டையும், எந்தவொரு நாடும் தாக்கி, அதன் சுதந்திரத்திற்கு ஊறு ஏற்பட அமெரிக்கா அனுமதிக்காது! இந்த அடிப்படையில் தான் தென்வியட்நாமை அமெரிக்கா நினைக்கிறதோ என்னவோ! "மார்ஷல் திட்ட"த்தை ஒப்புக்கொண்ட உறுப்பு நாடா தென்வியட்நாம்? என்று மட்டும் கேட்டு விடாதீர்கள்?

(7) இந்தியா இப்போது ஒரு பரபரப்பான நாடாக இல்லையா?

ஆமாம்! இந்தியத் துணைக்கண்டத்து அத்துணை மாநிலங்களிலும் ஏதோ ஒருவகை பரபரப்பு இருக்கத்தான் செய்கிறது! 'துப்பாக்கிச் சூடு' என்ற ஆயுதம் இந்திய அரசின் பலமான பிடியில் இருக்கிற வரையில் இப்பரபரப்புக்கள் யாவும் செய்தி இதழ்களின் 'பரபரப்பாக'வே இருக்கும்; உணவு கேட்டாலும் துப்பாக்கிச் சூடு; உரிமை கேட்டாலும் துப்பாக்கிச்சூடு. இந்தக் கொடுமையைக் களையத்தான் 'வாக்குச் சீட்டு' என்ற கேடயத்தை நீங்கள் வைத்திருக்கிறீர்களே!

(8) மனிதனுக்கு எப்படிப்பட்ட அனுபவங்கள் வேண்டும் என்கிறீர்கள்?

குட்டுப்பட்டு தெளிந்த ஒன்றைத்தான் **பட்டறிவு** (அனுபவம்) என்பார்கள்! அனுபவித்துப் புரிந்துகொள்வதுவும் அனுபவமே. சுதந்திரத்திற்குப் பின் ஒரு நாட்டுக்கு 'சோதனை'கள் இயல்புதான். கடந்த 19 ஆண்டுக் காலத்தில் இந்நாட்டு மக்களுக்கு ஏற்பட்ட 'சோதனை'கள் மூலம் கிடைத்த அனுபவம் மட்டும் எந்தவொரு மனிதனுக்கும் வேண்டவே வேண்டாம்!

(9) வானம் பொய்த்ததுதான் இந்திய உணவுத் தட்டுப்பாட்டுக்குக் காரணம் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?

இதுதான் காரணம் என்று காங்கிரஸ் அமைச்சர்களின் **'உள் மனம்'** ஒப்புக்கொள்கிறதாவென முதலில் கேளுங்கள்.

(10) ரூபாயின் வெளிநாட்டு நாணய மதிப்பைக் குறைத்தால் உள்நாட்டில் 'விலை உயர்வு' எப்படி ஏற்பட முடியும்?

— உள்நாட்டு உற்பத்தியில், பல பொருள்களின் விஷயத்தில் விலையேற நியாயமும் காரணமும் இல்லைதான்! ஆனால் இந்திய அரசே தன் பல பொருள்களுக்கு விலையேற்றி முன்மாதிரியாக நடந்து காட்டிவிட்ட பிறகு மற்ற வணிகர்களது பேராசைக்குக் கேட்கவா வேண்டும்! தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயாதா பின்னே!

(11) வானொலியில் பண்டங்களின் விலை விவரம் கூறப்படுவது எதைக் குறிக்கிறது?

நாட்டுக் குடிமகன் ஒவ்வொருவனும் முதலில் ஒரு வானொலிப் பெட்டியை வாங்கி வைத்துக் கொண்டு, பின்னர்தான் உணவுப் பொருள்கள் வாங்கவேண்டும் என்பதைக் குறிக்கிறதோ!

(12) தமிழ் நாட்டு எம். பி.க்களின் எண்ணிக்கையில் இரண்டு குறைந்து போனது எதைக் குறிக்கிறது?

மற்ற மாநிலங்களின் மக்கள் உற்பத்தியைவிட, தமிழ் நாட்டில் அந்த உற்பத்திக் குறைந்து போயிருக்கிறது என்பதைக் குறிக்கிறது.

நம்புங்கள் ஐயா!

எல்லா சக்தியும் உங்களுக்கு இருக்கிறது; நீங்கள் எதையும் சாதிக்கலாம். எல்லாவற்றையும் சாதிக்கலாம். நம்புங்கள், தாம் பலவீனர்கள் என்று ஒருபோதும் நினைக்காதீர்கள்!

—விவேகானந்தர்.

காஞ்சி

மலர் 2 17—7—66 இதழ் 51

அணி திரளட்டும்

கண்டிக்கிறார்கள், பொறுப்பினை உணர்ந்தவர்கள்.

கண்டித்துத் திருத்துவதும், நல்வழிப் படுத்துவதும் தமது கடமை என்று உணருபவர்கள், தவறான போக்கினையும் அடாத செயலினையும் ஆளவந்தார்கள் மேற்கொள்ளும்போது, கண்டிக்கத்தான் செய்கிறார்கள்.

அமைச்சர் பதவி உயர்வானதுதான், ஆனால் அமைச்சர்களை அமர்த்தும் அதிகாரம் பெற்றவர்கள் நாம் என்ற உரிமை உணர்ச்சியுடன் கண்டிக்கிறார்கள்.

கண்டனம் கேட்டதும், கருத்துத் தெளிவுபெற்று ஆளவந்தார்கள் தமது தவறான போக்கை மாற்றிக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையுடன் கண்டிக்கிறார்கள்.

உங்கள் நோக்கமறிந்து நடப்பதே என் கடமை; உங்கள் நலனுக்காகவே எல்லா நடவடிக்கைகளையும் அமைத்துக்கொள்வேன்; என்போக்கிலே ஏதேனும் குறை இருந்திடின் கூச்சப்படாமல் எடுத்துக்காட்டுங்கள்; திருத்தமுற்படுங்கள் என்றெல்லாம் ஆளவந்தார் நிலைபெறுவதற்கான ஆதரவு திரட்டியபோது பேசிடக் கேட்டதால், தவறு நேரிடும்போது கடமை உணர்ச்சியுடன் கண்டிக்க முற்படுகிறார்கள்.

ஆனால் அந்தக் கண்டனங்களை ஆளவந்தார்கள் துளியேனும் பொருட்படுத்துகின்றனரா? கண்டிக்க முன்வருபவர்களுக்கு எள்ளளவேனும் மதிப்பளிக்கின்றனரா? பொறுமையுடனாவது குறைகளை எடுத்துக் கூறிடும்போது கேட்டுக்கொள்கின்றனரா? பொது நலனுக்காகத்தான் சொல்லுகிறார்கள், பொறுப்பினை உணர்ந்துதான் பேசுகிறார்கள் என்ற உணர்வாவது கொள்கின்றனரா? இல்லை!

ஒரு அலட்சியப் புன்னகை! ஏளனச் சிரிப்பு! ஒரு முறைப்பு, ஒரு கனைப்பு! — இவைகளைக் கொண்டே, மிரட்டப்பார்க்கின்றனர், குறை களைந்திடுக என்று முறையிட வருகின்றவர்களை.

கரம் கூப்பினார்!
கையைப் பிடித்துக்கொண்டார்!
கனிவாகப் பேசினார்!
நம்ம வகுப்பு அல்லவா என்று கேட்டார்!
என்கடன் பணிசெய்து கிடப்பதே என்றார்!
குறைகளைக் களைவதாக வாக்களித்தார்!
மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்றார்!
மகள் சுகமா? மகனுக்குத் திருமணம் எப்போது?
தொழில் நல்லபடி நடக்கிறதா என்றெல்லாம் தோழமையுடன் கேட்டார்!

ஆளவந்தாராகத் திட்டமிட்டுக் காங்கிரசார் புனைந்த கோலம் கண்டு இவ்விதமெல்லாம் உருகிப்போயினர் 'சூதுவாது' அறியாத பொதுமக்கள்.

புன்னகை பூத்தமுகம் பிறகோர்நாள் கடுகடுப்பைக் காட்டும்; கனிவுடன் பேசியவர் கனல் கக்குவார்; பணி செய்வதே கடன் என்றவர் சுயநலத்திலே புரளுவார் என்று எண்ணிப் பார்த்திடவும் நல்லமனம் படைத்த பொதுமக்களால் முடியவில்லை.

கண்டித்துத் திருத்திடலாம் என்று முனையும் போதோ ஆளவந்தாராகி விட்டவர்கள்

என்னதெரியும் உனக்கு!
என்னையா குறை கூறுகிறாய்!
இழுத்துச் செல்லுங்கள் போலீஸ் கொட்டடிக்கு!

என்றெல்லாம் ஆர்ப்பரிக்கின்றனர். இத்தனைக் காட்டுக் குணமா நாட்டை ஆள 'முற்பட்டவர்களுக்கு; இவர்களின் உண்மையான உருவத்தை இன்றல்லவா காணுகின்றோம்; முன்பு மயக்கிவிட்டனர் நமது மதியை; இப்போது மமதையைக் கக்குகின்றனர் என்றெல்லாம் எண்ணிஎண்ணி மனம் குமுறுகின்றனர், மக்கள்.

மக்களாட்சி நடாத்துகிறோம் என்ற உணர்வு உள்ளவர்களாக ஆளவந்தார்கள் இருந்திடுவார்களானால், பொறுப்பான நிலையினில் உள்ளவர்கள் எடுத்துக் காட்டிடும் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பார்கள்; இடித்துரைப்பவர்களிடம்கூட எரிச்சல் கொள்ள மாட்டார்கள்; விளக்கமளிப்பார்கள்; வாதாடுவார்கள்.

ஆனால் இன்றைய ஆளவந்தார்களின் போக்கு அவ்விதமாகவா இருக்கிறது? சீறுகிறார்கள்! எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசுகிறார்கள்! எவனுக்கு என்னதெரியும் என்று கேட்கிறார்கள். போ! போ! தூ! தூ! என்று பேசுகிறார்கள்; முன்பு கூப்பிய கரத்துடன் நின்றோமே என்ற நினைப்புமற்று.

இந்தப் போக்கு தடித்துவிடுமானால், பிறகு ஜனநாயகம் என்பதே கேலிக்கூத்தாகிப்போகும்.

கருத்துத் தெளிவளிக்கும் உரிமை கொண்டவர்கள், தவறுகண்ட இடத்தில் கண்டிக்கும் கடமையை மேற்கொண்டவர்கள், இதழாசிரியர்கள், பல்வேறு துறைகளிலே வித்தகர்களாக உள்ளவர்கள், மக்கள் அணியினை நடாத்திச்செல்லும் பல்வேறு கட்சிகளின் தலைவர்கள்.

அவர்கள் அமைச்சர்கள் அல்ல! பளபளப்பு இல்லை! பில்லைச் சேவகனும் முன்னும்பின்னும் இல்லை! ஆனால் கடமையும் உரிமையும் அவர்களுக்கு இருக்கிறது. அவர்களும் தந்திடும் பணமே அமைச்சருக்கும் அவருக்கு அந்தஸ்த்து அளித்திடும் முறைகளுக்கும் கருவிகளுக்குமான செலவுக்குப் பயன்படுகிறது.

ஆனால் அமைச்சர்களாகிவிட்டதும், நெறித்த புருவத்தினராகிவிடுகின்றனர்; தம்மை அமைச்சர் வேலை பார்த்திட அனுமதி வழங்கியவர்களையே துச்சமென்று கருதிடத் துணிகின்றனர்.

காரணம் மூன்று. ஒன்று மறுதேர்தல் வரையில் கண்டனம் ஆயிரம் கிளம்பிடினும், பதவியிலேயிருந்து விரட்டமுடியாது என்ற துணிவு,

மற்றொன்று கண்டித்துப் பலன் காணாதது கண்டு சலித்துப்போய், தாமாகவே ஓய்ந்துபோய்விடுவார்கள்; கண்டனத்தைக் காதில் போட்டுக்கொள்ளாமல் இருந்துவிட்டால் போதும் என்ற தந்திரம்.

மூன்றாவது, பதவி காரணமாகத் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தைக் காட்டி, பலருக்கு ஆதாயம் கிடைத்திடும் என்ற ஆசையை ஊட்டியும், பலருக்கு தொல்லை தந்திடமுடியும் என்ற அச்சத்தை மூட்டியும் அடக்கி ஒடுக்கி வைத்திட முடியும் என்ற துணிவுகலந்த நம்பிக்கை. பதவியில் உள்ளவர்களிடம் பல்லிளித்துக் கிடந்திடவும், பஜனை பாடிடவும், பல்லக்கு சுமந்திடவும் பலர் கிடைத்துவிடுகின்றனர். இவர்களை உசுப்பி, கண்டனம் பேசுவோர் மீது ஏவிவிட்டுவிடமுடிகிறது.

மொழிப் பிரச்சினை குறித்து ஆளவந்தார்கள் மேற்கொண்ட போக்கினைக் கண்டித்தவர்கள், 'ஏனோ தானோக்கள்' அல்ல! ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையிலே வித்தகர்கள். ஆனால் அவர்களின் பேச்சுக்கு ஒருதனி மதிப்பேனும் தந்தனரோ ஆளவந்தார்கள்? இல்லை!

எந்தவிதமான அரசியல் ஆதாயத்தையும் எதிர்பார்க்காமலும் விரும்பாமலும் மாணவர்கள் தமிழ் காத்திடக் கிளர்ச்சி மேற்கொண்டனர். மாணவர்கள், எதிர்காலத்தை உருவாக்கும் பொறுப்பில் உள்ளவர்கள். அவர்களிடம் துளியாவது பரிவு காட்டினரா ஆளவந்தார்கள்?

என்ன நடைபெற்றது? மாணவர்களைச்சந்தித்துப் பேசக்கூட முடியாது என்றுகூறிவிட்டார் பக்தவத்சலனார் — சேக்கிழார் மரபினர் என்கிறார்கள்!

அவர் போக்கு அவ்விதம் என்றால், பொதுமக்கள் பணிக்காகவே தம்மை ஒப்படைத்துவிட்டிருக்கிறாரே பெரியவர், காமராஜர் அவராகிலும் அந்த மாணவர்களை அழைத்துப் பேசினாரா? இல்லை! கேரளத்திலே உலாவந்துகொண்டிருந்தார்! அவருக்குத்தான் 'ஜோதி' தூக்குகிறார்கள் மாணவர்கள். மாணவர்களின் அந்தப் பண்புடன், பெரியவர் காட்டிய போக்கை ஒப்பிட்டுப் பார்க்கும்போது...சொல்லவே கூச்சமாக இருக்கிறது.

எல்லா இதழ்களும் — எடுபிடிகள் நடாத்தும் ஏடுகள் தவிர—இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து எழுதின. துளியாவது அந்த இதழ்களுக்கு மதிப்புத் தரப்பட்டதா? இல்லை!!

ஐம்பது பிணங்கள் கீழே விழுந்தன.

மொழிப் பிரச்சினை சம்பந்தமாக மட்டுமல்ல — மற்ற எந்தப் பிரச்சினைக்கும் இதே போக்குதான்.

பாதுகாப்புச்சட்டத்தை இன்னமும்வைத்திருக்கக் கூடாது என்று நீதிபதிகளும், சட்ட நிபுணர்களும் கூறினர். ஏடுகள் எழுதின. முன்னாள் சட்ட அமைச்சர் சென் கூடக் கூறினார். மதிப்பளித்தனரா? இல்லை.

சேலம் உருக்காலைபற்றி வலியுறுத்தி எழுதாத ஏடு இல்லை; வற்புறுத்திப் பேசாத அரசியல் தலைவர் இல்லை; வாதாடாத பொருளாதார வித்தகர் இல்லை!

என்ன மதிப்புத் தரப்பட்டது இவர்தம் கருத்துக்கு? துளியும் இல்லை.

இந்த அரசியல் அகம்பாவத்துக்கு ஒரு முடிவே இல்லையா? அறிவாளர்கள் அனைவருமே அடிமைகளாகிக் கிடந்திடவேண்டியதுதானா! இதற்கா ஜனநாயகம் என்ற பெயர்? பொருந்துமா!

ஆளவந்தார்களின் அரசியல் அகம்பாவத்துக்கு மூன்று காரணங்கள் உள்ளன என்றோம்...பிறிதொன்றும் உளது.

ஆளுங்கட்சியின் போக்கைக் கண்டிக்கும் உரிமையும் கடமையும் கொண்ட 'எதிர்க்கட்சிகள்', எந்தப் பிரச்சினையிலும் ஒன்றுபட்டு நின்று செயலாற்றாது என்ற துணிவு மிகுதியாக இருக்கிறது, ஆளுங்கட்சிக்கு.

அந்தத் துணிவுக்குத் தீனி போடுகிறவிதமாகவே, எதிர்க்கட்சிகள் ஒன்றை ஒன்று குத்திக்கொண்டும் குடைந்துகொண்டும் உள்ளன. இதனால் நேரக்கேடு நேரிடுவதுடன், வலிவுக்கேடும் ஏற்பட்டுவிடுகிறது.

மிகப்பெரிய அணி திரட்டிப் போராடினால் மட்டுமே வீழ்த்தக்கூடும் என்றவிதமாக வலிவுபெற்றுவிட்டுள்ளது காங்கிரஸ் எதேச்சாதிகாரம்.

இதற்கே நேரத்தையும் வலிவையும் அறிவாற்றலையும் பயன்படுத்த வேண்டியதிருக்க எதிர்க்கட்சிகள் ஒன்றை ஒன்று இடித்துக்கொள்வது காண்கின்றோம். காங்கிரஸ் எதேச்சாதிகாரத்துக்கு இது தெம்பையும் துணிவையும் மிகுதியாக்கிவிடுகிறது. இந்தக் கட்சிகளெல்லாம் ஒன்றுபடப்போவதேது நம்மை எதிர்த்து வெற்றி காணப்போவதேது என்று ஆளவந்தார்கள் இறுமாந்து போயுள்ளனர்.

இந்த இறுமாப்பை நொறுக்கிட முனையாவிட்டால், ஒரு கட்சி சர்வாதிகாரம் தலைதூக்கும்; தலைதூக்கிடின் என்னென்ன விபரீதங்கள் நேரிடும் என்பதனை ஆப்பிரிக்க நாடுகள் பல எடுத்துக் காட்டுகின்றன.

இதனை நன்கு உணரத் தலைப்பட்டதன் விளைவாக, இப்போது எதிர்க்கட்சிகளிடம் ஒரு நேர்த்தியான போக்கு மலர்ந்துகொண்டு வருகிறது.

கழகத்தின் மீது தாக்குதல் நடத்தும் தனிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டதோ என்று எண்ணத்தக்க விதத்தில் நடந்துகொண்டு வரும் வலதுசாரி கம்யூனிஸ்டுகளிடமே ஒரு மனமாறுதல் ஏற்பட்டிருக்கக் காண்கின்றோம்.

திருநெல்வேலி நகராட்சியைக் காங்கிரஸ் அரசு கலைத்துள்ள எதேச்சாதிகாரத்தை வலதுசாரி கம்யூனிஸ்டு கட்சி வன்மையாகக் கண்டித்திருக்கிறது. இது வரவேற்கத்தக்க போக்காகும். நமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதிலே மகிழ்ச்சி அடைகிறோம்.

இஃதேபோல, காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தின் தாக்குதல் எந்த எதிர்க்கட்சி மீது வீழ்ந்தாலும் கண்டித்திட மற்ற எதிர்க்கட்சிகள் திரண்டெழுந்திடின், காங்கிரஸ் எதேச்சாதிகாரம் அச்சம் கொண்டிடும்; அதன் ஆணவம் அழிந்துபடும்.

(16-ம் பக்கம் பார்க்க)

ஆலந்தூர் மதி தியேட்டரில்

17—7—66ந் தேதி

வளையாபதி முத்துகிருஷ்ணன், K; R. பக்கிரிசாமி

நடிக்கும்

K. S. B. ரிகிரியேஷன்சாரின்

S. S. சிவனப்பா எழுதிய

ஆனந்தக் கூத்து

நாடகம் நடைபெறும்.

டிக்கெட் ரூ. 5, 2, 1.

சேட்போர் மனம் உருகும் விதமாக இருந்தது அந்த உபதேசம்! அருள் வாக்கு
என்றும், ஆத்ம சக்தியின் விளைவு என்றும் பலர் வியந்து புகழ்ந்திடும் விதமான உப
தேசம்!!

கல் மனமும் கரையும்! காதகனும் புனிதனுவான்! மனமாசு அகலும்! மதி துலங்
கும்! வழி தவறி நடந்து வந்தவனும் தன் குற்றத்தை உணர்ந்து நெஞ்சு நெக்குருக நிற்
பான்; புதுப் பிறவியாகிடுவான்! அப்படிப்பட்ட அருமையான உபதேசம் அது.

கர்த்தரின் கட்டளைகளை எத்தனை விளக்கமாக்கிக் காட்டுகிருர் இந்த வித்தகர்!

நாமும்தான் நித்த நித்தம் படிக்கின்ருேம் 'வேதம்'-என்ன பயன்! இவர் கூறிடும்
போதல்லவா அருமை புரிகிறது!

ஆதாரங்களை அள்ளி வீசுகிருர்; சான்றுகள் சரமாரியாக! மேற்கோள்ளும் விளக்
கங்களும் எவ்வளவு சுவையுடன்! இதற்கு முன்பு இதுபோல உபதேசம் அருளியவர்

கழுகும் கிளியும்!

எவரையும் கண்டதில்லை
கேட்டவர்கள் கூறினர்.
வில்லை! எல்லாம் நாதன்
ஏதும் இல்லை! எல்லாம்
கற்றதனைக் கூறிடும் வித்
காட்டிடும் வழிநடப்பவன்.
மூலம்!
றுத்தெளிந்து பேசுகிறேன்

என்று அந்த உபதேசம்
நானுகளதனையும்கூறிட
அருளியது!! என் சொல்
இறைவன் இட்ட பிச்சை!
தகன் அல்ல நான்! கர்த்தர்
அவர் பேசுகிருர், என்
ஆண்டு பலவாகக் கற்
என்றும் எண்ணற்க! நான்

படித்தது ஒரே ஏடு! படிப்பது ஒரே ஏடு! அந்த ஒரு ஏடுபோதும் உள்ளத்திலே அருள்
ஒளியைத் தந்திட. அது புலவர் தீட்டிய ஏடு அல்ல—புனிதன் அருளிய வேதம்-பைபிள்!
அதில் உள்ளதனைத்தான் நான் எடுத்து உரைக்கின்றேன்! — என்று அவன் உபதேசம்
செய்கிருன், கேட்போர், கண்களில் நீர் துளிர்க்கிறது.

அதிலும் பத்துக் கட்டளைகளில் எட்டாவது கட்டளையான பிறர் பொருளைக் கள
வாடாதே?—என்ற கட்டளைபற்றிய உபதேசம் முதல்தரமாக அமைகிறது.

திருடாதே! திருஅருளை இழந்திடாதே!
திருடாதே! சமூகத்தைக் கெடுக்காதே!
திருடாதே! பாப மூட்டையைச் சேர்த்துக்கொள்ளாதே!

எட்டாவது கட்டளைபற்றி அவன் செய்த உபதேசம் கேட்டு, 'உபதேசியார்கள் வியந்
தனர்—அவ்வளவு அற்புதமாக இருந்தது அந்த உபதேசம்.

உபதேசமும், திடலில் அல்ல! திருக்கோயிலில்!!

இதே எட்டாவது கட்டளைபற்றி எவரெவரோ பேசினர், கேட்டோம்; இவர்
போலவா அவர்கள் உபதேசம் செய்தனர்! என்று கூறினர் திருக்கோயிலில் கூடி அந்த
உபதேசத்தைக் கேட்டவர்கள்.

ஆனால் அந்த அருமையான உபதேசம் செய்தவர்—அருள் பெற்ற
வனே என்று பலரும் வியந்திடத்தக்க விதமான உபதேசம் செய்தவர்—



உதட்டில் உபதேசம்! உள்ளத்திலே, தம்பி!

எட்டாம் கட்டளை பற்றிய விளக்கத்தை ஏற்புடைய முறையிலே அளித்த அந்த உபதேசி, ஒரு திருடன்!!

மோடார் திருடியவ்ன்! பிடிபட்டுச் சிறையில் அடைக்கப்பட்டவன்! அவன்தான் அத்தனை அருமையாக உபதேசம் செய்கின்ருன், எட்டாவது கட்டளை பற்றி; களவாடுவது பாபம் என்று!!

இருந்தால் என்ன? பூர்வ் ஜென்ம, வினையால் களவாடினுன்; சிறைப்பட்டான்; சிறைச்சாலையையே தவச்சாலையாக்கிக்கொண்டு, செய்த தவறுக்காக வருந்தி இறைவனிடம் முறையிட்டு, பாபம் கழுவப் பெற்று, புனிதனுகி இருப்பான்! அதனுல்தான் 'உபதேசி'யாகி இருக்கிருன். முன்பு களவாடியவன் என்பதாலே, அவன் இப்போது 'உப்தேசி'யாகக் கூடாது என்று கூறிவிடலாமா?—என்று கேட்டிடுவார் உளர்.

தம்பி! இவன், தான் குற்றம் செய்ததை ஒப்புக்கொண்டு, கழுவாய் தேடிக் கொண்டவன் அல்ல! செய்த பாபத்தைத் துடைத்து அருளும்படிப் பரமனை இறைஞ்சி புனிதன் ஆனவனல்ல.

களவாடினுன்

சிறைப்பட்டான்

சிறைக்காவலரை ஏய்த்துத் தப்பி ஓடினுன்.

ஊரை ஏய்க்க 'உபதேசி' வேடம் புனைந்தான்.

எட்டாவது கட்டளையை மீறிய இந்த எத்தன் அதே எட்டாவது கட்டளையைப் பற்றியே அருமையாக 'உபதேசம்' செய்வதன் மூலம், சட்டத்தின் கண்களையும் சமுதாயத்தின் கண்களையும் குருடாக்கிடமுனைந்தான். உள்ளம் திருந்தியவன் அல்ல! உதட்டளவு உபதேசம்! ஊரை ஏய்க்க உபதேசம்!

பிறகு அவன் கண்டுபிடிக்கப்பட்டான்.

புரட்டு அம்பலமாயிற்று. இவனைப்புனிதன் என்று நம்பிஞேமே ஏமாளித்தனத்தால் என்று மக்கள் கூறினர்.

கதை அல்ல! நடந்த நிகழ்ச்சி!

சிட்னி என்ற நகரிலே, திருக் கோயில்களிலே எட்டாவது கட்டளைபற்றி உபதேசம் செய்து வந்தவன் எத்தன் என்பதும், அவன் திருட்டுக் குற்றத்துக்காகச் சிறைப்படுத்தப்பட்டு, அங்கிருந்து ரொட்டி வண்டியிலே ஒளிந்துகொண்டு தப்பி ஓடிவிட்டான் என்பதும் பிறகே தெரியவந்தது; அவன் செய்த உபன்யாசங்களைக் கேட்டு உருகிய பிறகு.

இந்த நிகழ்ச்சிபற்றி இதழ்களிலே படித்தபோது தம்பி! எனக்கு ஒரே வியப்பு.

எவ்வளவோ அறிவுத் தெளிவும் ஆராய்ச்சித் திறனும் வளர்ந்துள்ள இந்த நாட்களிலும், மக்களிடம் கப்பிக்கொண்டுள்ள ஏமாளித்தனத்தைப் பயன்படுத்திக் கொள்ள எத்தர்களால் முடிகிறதே! உருவத்தைக் கண்டும், புனைந்திடும் கோலம் கண்டும், பேசிடும் மொழியின் பாங்கு கண்டும், புனிதத்தன்மை பற்றிய பேச்சைக் கேட்டும், மக்கள் மயங்கிப் போகிருர்களே!—என்று எண்ணிக் கவலை மிகக் கொண்டேன்.

மதப் போர்வை அத்தகைய மன மயக்கத்தைத் தருகிறது; புரிகிறது!

எதனை நாம் புனிதமானது என்று நம்பிப் போற்றுகிருேமே, அந்தப் புனிதத்தையே, புரட்டுக்குப் பயன்படுத்திக் கொள்ளும் புல்லர்கள் உலவியபடிதான் இருக்கிருர்கள். விழிப்புடன் இருந்தாலொழிய எத்தர்கள், கிளம்பியபடிதான் இருப்பார்கள்; மக்களை ஏமாளிகளாக்கியபடிதான் இருப்பார்கள் என்று எண்ணிக் கொண்டேன்.

அந்த நேரமாக நண்பரொருவர் வந்தார்; அவரிடம் கூறினேன், என் மனதிலே தோன்றிய இந்தக் கருத்தை. அவர் இடி இடியெனச் சிரித்தார். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. என்ன! என்ன! இது நகைப்புக்குரிய விஷயமா! மக்கள் மதக்கோலம் புனைந்திடும் எத்தர்களிடம் ஏமாந்துபோகும் செய்தி கேட்டு, நாம் வெட்கப்பட வேண்டும், வேதனைப்பட வேண்டும், ஆத்திரப்பட வேண்டும், பகுத்தறிவுப் பிரசாரத்தை மும்முரமாக்க வேண்டும், அவ்விதமிருக்க, நான் இந்த

ஜனதா ஆயுர்வேத வைத்தியசாலை

JAVS

உரிமையாளர்
M. அமீர்பாட்சா
மதருஸ் ஸ்டேட் சோல் ஏஜண்ட்

54, சோலைஹால்ரோடு. திண்டுக்கல்.

ஏஜன்சி இல்லாத ஊர்களுக்கு ஏஜன்சி தேவை!

எங்களிடம் கோல்டன் டானிக் [பேட்டன் டானிக்] தசமூலாரிஷ்டம், பிரசாதிக்கசுதா, பாலாமிருதம், சுதாமிருதம், கதலிக்கல்ப்பம், செவனப்பிரகாசம், ரதிரமணன், ஆஸ்த்துமா, க்ஷயம், டி. பி. இவைகளுக்கு சிறந்த லேகியம்

'கருங்குரங்கு ரஸாயனம்'

மற்றும்

'மதுகாசவம்'

முதலிய ஆயுர்வேத மருந்துகளும் கிடைக்கும்.

ஏஜன்சிகளுக்கு நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.

வெட்கமுங் கெட்டு வெளிப்பட்ட மூளிக்கு...

விஷயத்தைக் கூறிடக் கேட்டுச் சிரிக்கின்றீரே, ஏன்? என்று கேட்டேன்.

அவர் சொன்னார், அண்ணாத்துரை! மதவேடம் போட்டுக் கொள்பவன்தான் மக்களை மயக்க முடியும் என்று எண்ணிக்கொண்டு இத்தனை ஆத்திரப்படுகிறாய், உலகம் போகிற போக்கு புரியாமல்; அதை எண்ணித்தான் சிரித்தேன்; மதவேடம் போடாமலேயேகூட, மக்களை மயக்கிடத்தக்க உபதேசம் செய்பவர்கள் உலவுகிறார்கள்; அவர்களைப் பார்க்கவில்லையா என்று கேட்டார்.

விளக்கம் கேட்டேன். அவர் கூறினார், எட்டாவது கட்டளையை மீறியவன் எட்டாவது கட்டளையின் அருமை பற்றிய உபதேசம் செய்தான் என்பதுதானே உனக்கு வியப்பாக இருக்கிறது? எனக்கு அதிலே வியப்பு ஏற்படவில்லை. அவனாகிலும் 'பைபிள்' கருத்திலே புலமை காட்டி, தன்னைப் புனிதன் என்று நம்பும்படி மக்களை மயக்கினான், **டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்** அப்படிக்கூட எந்த **'அருட்பாவை'**யும் கற்றுத் தெளிந்து வித்தகராகிடவில்லையே; கொச்சைத் தமிழில் தானே பேசுகிறார், அவர் ஊருக்கு உபதேசம் செய்து கொண்டிருக்கிறாரே, அது உனக்கு ஆச்சரியமாக இல்லையா? என்றார்.

"இது போக்கிரித்தனமான பேச்சு! நான் கள்ளனாக இருந்தவன் கர்த்தர் அருள் பெற்றவன்போல நடித்து மக்களை மயக்கிய புரட்டு பற்றிக் கூறுகிறேன்; நீ காங்கிரஸ் தலைவருள் ஒருவரான டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் ஊருக்கு உபதேசம் செய்கிறாரே, அது நியாயமா என்று கேட்கிறாயே, முறையா அது" என்று சற்றுக் கோபத்துடன் கேட்டேன். என் நண்பர்,

நான் உபதேசம் செய்து ஊராரை மயக்கப் பார்த்திடும் போக்கு பற்றி மட்டுமே, கூறுகிறேன், நீ எதற்காக களவாடியவனுடனா, 'கனம்' ஆக இருந்தவரை ஒப்பிடுகிறாய் என்று கேட்கிறாய். மக்கள், தான் சொல்லுவதை நம்புவார்கள் என்ற உறுதியுடன் தானே, டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் பேசுகிறார்? என்று கேட்டார்.

ஆமாம்! தனது பேச்சை நம்புவார்கள் என்ற நம்பிக்கையுடன்தான் அவர் பேசுகிறார் என்றேன்.

டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் பேச்சு நம்பத்தகுந்தது அல்ல என்று இன்றைய கல்வி அமைச்சராக உள்ள **சக்ளா** அவர்கள், பம்பாய் நீதிபதியாக இருந்தபோது முந்திரா விவகார சம்பந்தமாக எழுதிவைத்திருக்கிறாரே, தெரியுமல்லவா? என்று கேட்டார். தெரியும் என்றேன்.

ஆக, யாருடைய பேச்சு நம்பத்தகுந்ததாக இல்லை என்று முந்திரா விவகார விசாரணையின்போது ஒரு நீதிபதியால் கூறப்பட்டிருக்கிறதோ, அந்த டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், எந்தத் துணிவிலே மக்களிடம் பேசுகிறார், எந்தத்துணிவிலே, தன் பேச்சை மக்கள் நம்புவார்கள் என்று எதிர்பார்க்கிறார்? அதைச் சொல்லு! என்று கேட்டார்.

என்னால் பதில் ஏதும் கூறமுடியவில்லை. நானும் அந்த நண்பருடன் சேர்ந்துகொண்டு சிரித்தேன்.

ஆனால் தம்பி! டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் நடாத்திக்கொண்டிருக்கும் உபதேசத்தில், நமது கழகத்தைப் பற்றி அவர் கூறிய கருத்துபற்றி எண்ணும்போது, சிரிப்பு அல்ல, உள்ளபடி வேதனைதான் பீறிட்டுக் கொண்டு கிளம்புகிறது.

ஒருமுறைக்கு இருமுறை 'உருட்டிவிடப்பட்ட' இந்த உத்தமர், தமக்கு நேரிட்ட 'கதி'யை எண்ணி, முக்காடிட்டு மூலையில் உட்கார்ந்திருக்கவேண்டும்; ஆனால் உலாவருகிறார், வெட்கமின்றி! உபதேசமும் செய்கிறார் துணிவுடன். கழகம் பற்றி மிகக்கேவலமாகப் பேசுகிறார், துடுக்குத்தனத்துடன்.

இவர்மீது ஒரு புகார் கிளம்பிற்று.

புகார் செய்தவர்கள் நடுத்தெரு நாராயணர்கள் அல்ல; பாராளுமன்ற உறுப்பினர்கள்.

புகாரும் திடலில் கூறப்படவில்லை; எழுத்து மூலமாகவே குடிஅரசுத் தலைவருக்குத் தரப்பட்டது; இந்தியப் பிரதமரிடம் அது குடிஅரசுத் தலைவரால் தரப்பட்டது.

மற்றவர்களைப்பற்றி மிக மட்டமாகப் பேசும் இந்த மகானுபாவரிடம் உள்ளபடி நம்பிக்கையும், மதிப்பும் இருந்திருந்தால், 'புகாரை'ப் பெற்றுக் கொண்ட லால்பகதூர் என்ன செய்திருப்பார்?

என்ன துணிவு இப்படிப்பட்ட புகாரை, எனது நிதி அமைச்சர்மீது சுமத்த! அவருடைய யோக்யதை எப்படிப்பட்டது, நாணயம் எப்படிப்பட்டது! நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் அவர் செய்துள்ள தியாகம் எப்படிப்பட்டது! கோடி கோடியாகப் பணத்தைக் கொட்டிக் காட்டினாலும், அவர் நேர்மைக் கோட்டை விட்டு, இம்மி அளவாவது விலகுவாரா! சுயநலத்துக்கும் அவருக்கும் ஆயிரமாயிரம் காத தூரமாயிற்றே! தன் சுகம், தன் குடும்பசுகம் ஆகியவற்றையா அந்த உத்தமர் பெரிதாக மதிப்பார்! நிஷ்காமகர்மி அல்லவோ அவர்! அப்படிப்பட்ட ஒப்பற்ற உத்தமர்மீது, பாவிகளே! பழி சுமத்துகிறீர்களே - ஆகுமா, அடுக்குமா? அந்தப் புனிதர்மீது பழி சுமத்தினால் நான் உங்கள் புகார் மனுவைத் துளியாவது மதித்திடுவேனா? இதோ அதனைச் சுக்கு நூறாகக் கிழித்துக் குப்பைக் கூடையில் போடுகிறேன்! — என்றல்லவா கூறியிருந்திருக்க வேண்டும்.

ஆனால் லால்பகதூர் செய்தது என்ன?

மானரோஷத்திலே துளி அக்கறை உள்ளவர்களும், தம் மீது ஒரு புகார்மனு தொடுக்கப்பட்டு, அதனைத் தமது சகாவாகவும் தலைவராகவும் உள்ளவர், ஏறெடுத்தும் பார்க்க மறுத்தார் என்ற நிலை கிளம்புவதைத்தான் பெருமைக்கு உரியதாகக் கருதுவார்கள்.

டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், சாமான்யமான நிலையில் இல்லை, இந்தியப் பேரரசின் நிதிமந்திரி! நிதித்

நாடு நகைத்தது! நல்லோர் சிரித்தனரே!

துறை நிபுணர்! சிக்கல்களை அறுத்து எறிந்திடும் சமர்த்தர்! விளக்கம் அளிப்பதில் வல்லவர்! வாதாடுவதில் புலி!—என்றெல்லாம் விருதுபெற்றவர்.

அவர்மீது புகார்மனு! அதனைத் தள்ளுபடி செய்யவில்லை லால்பகதூர். ஏன்?

இந்த ஒரு கேள்வியை எண்ணி எண்ணி மனம் குன்றிக்கிடப்பர், தன்மானம் பெரிது என்று எண்ணிடும் இயல்பினர்.

புகார்மனு ஒன்று வந்தது.

பரிசீலனை செய்துபார்த்தேன்.

அவ்வளவும் அபத்தம், வீண்பழி என்று கண்டறிந்தேன்.

ஆகவே புகார் மனுவைக் கிழித்தெறிந்து போட்டுவிட்டேன்.

இவ்விதம் லால்பகதூர் கூறி இருந்திருந்தாலாவது, ஓரளவு தலைநிமிர்ந்து நடந்திடலாம்; நான் மாசற்றவன் என்பது கிடைத்த தீர்ப்பு என்று மார்தட்டிக் கூறிக்கொள்ளலாம்.

அந்த நிலையும் கிடைக்கவில்லை இந்த வித்தகருக்கு.

புகார்மனு ஒன்று வந்திருக்கிறது. அதனை அலட்சியப் படுத்திவிடுவதற்கில்லை. ஆகவே புகார் மனுவிலே கூறப்பட்டுள்ளவைகள் விசாரிக்கத் தக்கவைதான என்பதனைக் கண்டறிந்து கூறும்படி, இந்திய உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதிக்கு அந்த மனுவை பரிசீலனைக்காக அனுப்பிவைக்கலாம் என்று முடிவு செய்திருக்கிறேன் என்று லால்பகதூர் அறிவித்தார்!

இந்த அறிவிப்பைக் கேட்டதும், தன்மான உணர்ச்சி ததும்பிடும் மனதினர் ஒரு முழக்கயிறு கொடுத்துவிடுங்களேன் இப்படி என்னைக் கேவலப்படுத்துவதைவிட என்று கூறிக் குமுறி இருப்பார்கள்.

புகார் மனு குப்பைக் கூடைக்கு அனுப்பிவிடத் தக்கது அல்ல; தானே விசாரணை நடத்தி தள்ளிவிடத் தக்கது அல்ல, முதல் கட்டமாகவே, இந்தியாவின் தலைமை நீதிபதி பரிசீலித்துப் பார்க்கத்தக்க விதமானது என்று லால்பகதூர் தீர்மானித்தார் என்றால், அதைவிட இழிவு வேறு என்ன வேண்டும்.

நாடே நகைத்தது! இவரே துடிதுடித்தார்!

அப்படியானால் என்னிடம் தங்களுக்குப் பரிபூரணமான நம்பிக்கை இல்லை என்றல்லவா பொருள்படுகிறது என்று கேட்டார், டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்.

நியாயமான கேள்விதானே! லால்பகதூருக்கு, டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் நேர்மையிலும் நாணயத்திலும் முழுஅளவு நம்பிக்கை இருக்குமானால், புகார் மனுவைப் பிரதம நீதிபதியிடம் அனுப்பப்போகிறேன் என்று அறிவிப்பாரா? இவருக்குத் தெரியாதா, டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் எப்படிப்பட்டவர் என்பது—என்று நாட்டிலேயும் பலர் கேட்டனர்.

நயமாகப் பேசிப் பார்த்தார் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்! லால்பகதூர் அசைந்து கொடுக்கவில்லை.

பயம் காட்டிப் பார்த்தார்; அப்படியானால் நான் பதவியை ராஜிநாமாச் செய்கிறேன் என்றார்; லால்பகதூர் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

நீங்கள் விசாரணை நடத்துங்கள்! அல்லது மந்திரி சபையினரிலிருந்து ஒரு குழு அமைத்து, விசாரணை நடத்தச் சொல்லுங்கள்—என்று வாதாடிப் பார்த்தார் நிதி மந்திரி.

லால்பகதூர் அந்த வாதம், வேண்டுகோள், மிரட்டல், எதற்கும் அசையவில்லை. பிரதம நீதிபதியிடம்தான் புகார் மனுவை அனுப்பிவைப்பேன் என்று உறுதியாகக் கூறிவிட்டார்.

பதவியை ராஜிநாமாச் செய்தார், டி.டி. கிருஷ்ணமாச்சாரியார்!

லால்பகதூர் அதனை ஏற்றுக்கொண்டு, உடனடியாகவே வேறு ஒருவரை நிதிமந்திரியாக்கி விட்டார்!

இந்த இலட்சணத்திலே இருந்திருக்கிறது இவருக்கு லால்பகதூர் காட்டிய மதிப்பும் மரியாதையும். இவர் கிளம்புகிறார் ஊருக்கு உபதேசம் செய்ய.

(13-ம் பக்கம் பார்க்க)

ஏஜண்டுகள் தேவை

மலையாள வைத்தியசாலை

"கிஸ்கோ" (ஜில்லா ஏஜண்ட்)

மலையாள பார்மஸியில் தயாராகும் பவர்கூடிய ஆசவ அரிஷ்டங்கள் விற்பனைசெய்ய எல்லா ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை

உடனே விண்ணப்பிக்க:

State Sole Agent: சுலைமான்

மலையாள வைத்தியசாலை,

நெ. 145, R. S. ரோடு, :: திண்டுக்கல்-3

2—9

காட்டில் முரடர்

"ஏன் இவன் இப்படிச் சிரிக்கிறான்? இந்தச் சிரிப்பின் காரணம் என்ன?" என்று விளங்காமல் குலசேகரன் விழித்தான்.

"பூஞ்சோலை! அந்தத் திட்டத்தை நினைக்கும்போது எனக்கே சிரிப்பு வருகிறது! அவ்வளவு சாதாரணமான வேலை! அதன் விளைவோ—நீறு பூசிய குலசேகரன் நிலத்தில் விழுந்துகிடப்பான் பிணமாக! கொட்டு முரசு வேண்டாம்! கோரமான போர் வேண்டாம்! யானை, குதிரை, காலாட்படைகள் ஒன்றுமே வேண்டாம்! கொலை கூடாது, கொடுமை கூடாது, புத்தபிரானின் உபதேசத்திற்கு மாறானவை எவையுமே கூடாது என்றெல்லாம் பௌத்த துறவிகள் கூறினார்கள் அல்லவா—அந்தப் பெரியார்களின் சொல்லைத் தட்டவும் வேண்டாம்! ஆனால் வெற்றி நம்முடையதே! மதுரைச் சிம்மாசனம் நம் காலடியில் கிடக்கும்!" என்று கூறிவிட்டு இலங்கை அரசன் திரும்பவும் சிரித்தான்.

"தாங்கள் கூறுவது எனக்கொன்றுமே விளங்கவில்லையே?' என்று குலசேகரன் போர்வையைச் சரிசெய்து கொண்டான்.

"பூஞ்சோலை! தேர் எவ்வளவு பெரியது? அது தெருவில் போகும் போது, தரையே கிடுகிடுக்கிறது அல்லவா? அத்தகைய பிரம்மாண்டமான தேரின், சிறு அச்சாணியைக் கழற்றிவிட்டால் என்னவாகும்? அதைப் போன்றதுதான் என் திட்டமும்! குலசேகரனின் அரசுத் தேரின் அச்சாணி எது என்று யோசித்தேன்! தெரிந்தது! அந்த அச்சாணியைத் தேரைவிட்டு அப்புறப்படுத்திவிட்டால்......"

"யாரைத் தாங்கள் அச்சாணி என்று நினைக்கிறீர்?"

வேறு யாருக்கு அவ்வளவு ஆற்றலும், செல்வாக்கும் அவனது ஆட்சியிலிருக்கிறது — தூமகேதுவைத் தவிர! இன்றைய நிலைமையில் பாண்டிய நாட்டில் அவன் நினைத்தால் எதுவும் நடக்கும்! அவனது விருப்பத்திற்கு மாறாகச் சிறு துரும்பையும் அசைக்கும் துணிவு, அந்தக் குலசேகரனுக்குக் கிடையாதே! அத்தகைய செல்வாக்குமிக்கவனை, நாம் வலை வீசிப் பிடிக்க வேண்டும்! ......"

"என்ன, தூமகேதுவையா வலை வீசிப் பிடிக்கவேண்டும்என்கிறீர்?"

"எதற்காகப் பூஞ்சோலை இவ்வளவு ஆச்சரியத்தோடு கேட்கிறீர்? நம் வலையில் தூமகேது சிக்கமாட்டானே என்ற சந்தேகமா? பதவி ஆசை இருக்கிறதே — அது எப்படிப்பட்ட எஃகு உள்ளங்கொண்டவனையும் தலைகீழாக மாற்றிவிடும்! அந்த ஆசை, அவனுக்கு மட்டும் இருக்காதா? அவனென்ன முற்றுந் துறந்த முனிபுங்கவனா — அல்லது காவியணிந்த பரதேசியா? அவனது நடத்தை என்ன, நாட்டம் என்ன என்ற விவரங்களை அறிந்துவர மதுரைக்கு அனுப்பிவைத்த நமது ஒற்றன், நேற்று மாலை திரும்பி வந்தான்! அவன் கூறினான்—தூமகேதுவிற்கு மன்னனாக வேண்டுமென்ற ஆசை இருப்பதாக! அவனது அந்த ஆசையைப் பயன்படுத்திக் கொள்வதுதான் நமது புதுத் திட்டம்! இன்னும் ஒரு வாரத்திற்குள், இரகசியமாக அவனைச் சந்திக்க ஏற்பாடுசெய்யப்போகிறேன். 'குலசேகரனைக் கொன்று அவன் தலையை என்னிடம் ஒப்புவித்துவிட்டால், உம்மை மதுரை மன்னனாக்கி விடுகிறேன்!' என்று கூறப் போகிறேன்!"

"அந்த வலையில் தூமகேது சுலபத்தில் விழுந்துவிடுவான் என்று நம்புகிறீர்?"

"அதிலென்ன சந்தேகம்—நிச்சயம் விழுந்துவிடுவான்! மன்னன் பதவியென்ன அவனுக்கு அவ்வளவு சுலபத்தில் கிடைத்துவிடக் கூடியதா?"

"அப்படியானால் தூமகேது மதுரை மன்னனானதும், பௌத்தனாகிவிடுவான் என்று சொல்லுங்கள்!"

"உடனே ஆகமாட்டான்—ஆகவும் கூடாது! அப்படி அவன் திடீரென்று மதம் மாறினால், அவனுக்கு மிகவும் வேண்டியவர்கள் விரோதிகளாக மாறினாலும் மாறிவிடலாம் அல்லவா? ஆகவே கொஞ்ச காலத்திற்குச் சைவனாகவே இருப்பான்! சிறுகச் சிறுகத் திருநீற்றின் பரப்புக் குறைந்து கொண்டே வந்து, ஒரு நாளைக்கு மறைந்துவிடும்!"

அதைக் கேட்டதும், குலசேகரன் கலகலவென்று சிரித்துவிட்டான்.

"பூஞ்சோலை எதற்காகச் சிரிக்கிறீர்?"

"உங்கள் புதுத் திட்டம் அபூர்வமானது, அற்புதமானது! அந்த அற்பனை அரைநொடியில் வீழ்த்தக் கூடியது! குலசேகரன் நம்பிக் கொண்டிருக்கிறான், தூமகேதுவை உத்தமன் என்று! அந்த உத்தமனின் உடைவாள் மார்பில் பாய்ந்த பிறகு அல்லவோ அந்த அப்பாவிக்கு இந்த உலகம் புரியப் போகிறது! என்று குலசேகரன் சொன்னதைக் கேட்டதும், இலங்கை அரசன் களிப்பு பொங்கும் முகத்தோடு வாய்விட்டுச் சிரித்தான்.

குலசேகரன்வாய் அப்படிச்சொல்லிற்றே அன்றி, அவன்மனம் வேறு விதமாக எண்ணியது!

"இந்த இலங்கை அரசனைப் பற்றி, ஆற்றல் மிக்கவன் அசகாய சூரன் என்றெல்லாம் எண்ணிக் கொண்டிருந்தோமே! அவ்வளவும் சுத்தத் தவறு என்பது இப்போது தானே தெரிகிறது! இவனொரு ஆத்திரக்காரன்! அறிவுச் சூன்யன்!

தூமகேதுயார் என்பதுஎனக்குத் தெரியாதா! அவன் உயிரெல்லாம் சைவமாயிற்றே! சைவத்திற்காகத்தானே அவன் வாழ்கிறான்!

மதுரைச் சிம்மாசனத்தைத் தருகிறேன் என்று சொன்னதும், அவன் சிவனைத் தள்ளிவிட்டு புத்த சமயத்தைத் தழுவிக்கொள்வானுமே! இந்தப் பராக்கிரமபாகு உண்மையிலேயே ஏமாளிதான்! ஏதோ புதுத்திட்டத்தில் நம்பிக்கை வைத்துப்போரைமறந்தானே, அதுவரைக்கும் நல்லது'' என்றெண்ணி குலசேகரன் பெருமூச்சுவிட்டான்.

இலங்கை அரசனிடம் விடைபெற்றுக்கொண்டு அவன் புத்த விகாரத்திற்குத் திரும்பினான்.

எதிரியிடம் நேருக்கு நேர் பேசி ஏமாற்றிவிட்டு வந்தோமே என்று நினைத்து அவன் பூரிப்பு அடைய முடியவில்லை. காரணம், சுவடியடிகளைப்பற்றிய கவலை அவனை அதிகமாக வாட்டியது. அவர் எங்கு சென்றார், என்ன ஆனார் என்ற விவரமொன்றும் அவனுக்குத் தெரியவில்லை.

அந்த வருத்தத்திலேயே, இரண்டு நாட்களாகியும், அவன் அஞ்சலையையும் அறிவொளியடிகளையும் பார்க்கச் செல்லவில்லை.

மூன்றாம்நாள் காலை அவன் புத்த விகாரத்தைவிட்டு வெளியே செல்லப் புறப்பட்டபோது, எதிரே அறிவொளியடிகளும் அஞ்சலையும் வருவதைக் கண்டான்.

'வணக்கம் அடிகளே!' என்றான் குலசேகரன். அவர்கள் இருவரும் அருகே வந்ததும், "பூஞ்சோலை! எங்கே உன்னை இரண்டு நாட்களாகக் காணவே முடியவில்லை?" என்று அறிவொளியடிகள் அன்பு கனிந்த குரலில் கேட்டார்.

"புத்த விகாரத்தில் கொஞ்சம் வேலையிருந்தது, ஆகவே வரமுடியவில்லை!"

"அப்படியா? அது இருக்கட்டும், நீ எப்போது திருநெல்வேலிக்குப் புறப்படுகிறாய்?"

"இந்த ஊரும், இந்தப் புத்த விகாரமும் எனக்குமிகவும் பிடித்துவிட்டிருக்கின்றன! ஆகவே இன்னும் ஒருவாரம் இங்கே இருந்துவிட்டுச் செல்லலாம் என்று நினைக்கிறேன்!"

"இராமேச்சுரத்திக்கு இன்று நாங்கள் புறப்படுகிறோம்—ஆகவே உன்னிடம் சொல்லிவிட்டுப் போகலாம் என்று வந்தோம்!"

"இதென்ன இப்படித் திடீரென்று பிரயாணத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டீர்?"

"எதற்காகத் தங்கினோமோ அந்த வேலை முடிந்துவிட்டது! இனி வீணுக்காகிலும் எதற்காக நாங்கள் இங்கு இருக்கவேண்டும்! மதுரை மீது படையெடுப்பதில்லையென்று உறுதியாகப் பராக்கிரமபாகு கூறிவிட்டான்! அப்படி அவனைச் சொல்லச் செய்யவேண்டும்—போரினால் உயிர்கள் கொல்லப்படுவதைத் தடுக்கவேண்டும் — என்ற முடிவுதானே, என்னை இங்கு தங்கியிருக்கச் செய்தது! என் விருப்பம் வெற்றி பெற்றுவிட்டது! அதன் பிறகும் நான் இங்கு இருப்பது தேவையற்றதுதானே!"

"தங்களது பொன்னான மனதை அறிந்தால், இராமேச்சுரத்திற்கே ஓடிவந்து குலசேகரன் தன் நன்றியைத் தெரிவித்துக்கொள்வான்!"

"அவன் சார்பிலே இப்பொழுது நீதான் நன்றி செய்யேன்! மனிதனுக்கு மனிதன் அந்த உதவிகூடச் செய்யக்கூடாதா?" என்று அடிகள் சொல்லி ஏளனமாகச் சிரித்தார்.

"வேறொருசமயம் இந்த ஊருக்கு வந்தால் போகிறது—இப்பொழுது நீங்களும் எங்களோடு புறப்படுங்களேன்!" என்று அஞ்சலை கூறினாள்.

"இல்லை அஞ்சலை! சுவடியடிகளுக்கு இன்னும் ஏதோ வேலையிருக்கிறதாம் இங்கு! யாரோடு வந்தேனோ, அவரைத் தனியாக விட்டுவிட்டு, நான் மட்டும் புறப்பட்டுவிடுவது சரியா? ஆகவே இன்னும் ஒருவாரம் கழித்து நான் வருகிறேன்!" என்று அவளது முகத்தை உற்றுப் பார்த்தபடி, குலசேகரன் சொன்னான்.

"பூஞ்சோலை உன்னைத் தனியாக இங்கு விட்டுச் செல்வதில் அஞ்சலையைப் போலவே எனக்கும் மனவேதனையாகத்தான் இருக்கிறது! ஏனென்றால் நீ பொன்னையாவின் நண்பன்! எதையும் நீ தீர யோசித்துப் பார்க்கமாட்டாய்—பொன்னையாவைப் போலவே! பொன்னையா உணர்ச்சிக்கு அடிமையானான்—மனதை அடக்கியாளப் பழக்கப்படுத்திக்கொள்ளவில்லை! மனம் இருக்கிறதே அது ஒரு குரங்கு என்று அடிக்கடிக் கூறக் கேட்டிருப்பாய்! அது தன் உயிருக்கு ஆபத்தான காரியங்களைக்கூடச் சில சமயங்களில் செய்யத் துணியும்! மனம் அலையக்கூடியது! அடக்கி நிலைநிறுத்துவது கடினம்! அப்படி அடக்கிநிலைநிறுத்தத் தனிப் பயிற்சி வேண்டும்! ஒரு விரோதி இன்னொரு விரோதிக்குச் செய்யும் தீமையைவிட, நிந்திப்பவன் தன் எதிரிக்குச் செய்யும் தீமையைவிட, தவறான வழியில் செலுத்தப்பட்ட நம் மனமே நமக்கு மாபெரும் தீமைசெய்யும் என்று புத்தபிரான் கூறியிருக்கிறார். அந்த மணிமொழியை மறவாமல், தவறான வழியில் செல்லாதபடி மனதை அடக்கி ஆளவேண்டும்! அவசியமில்லாத நேரத்தில், ஏதோ வீண் உபதேசம் செய்வதாக எண்ணிவிடாதே, பூஞ்சோலை!"

"ஒருநாளும் அப்படி நான் எண்ணமாட்டேன்! உத்தமரான தங்களது வாயினின்றும் உதிரும் ஒவ்வொரு வார்த்தையையும்பொன்னாய் நினைப்பவன் நான்!"

"குடும்பஸ்தர், ஆகவே எல்லாமே உமக்குப் பொன்னாய்த் தோன்றுகிறது!" என்று சிரித்துக்கொண்டே அஞ்சலை கூறினாள்.

"சரி, பூஞ்சோலை! இந்த ஊரில் தூமகேதுவின் ஒற்றர்கள் இருப்பார்கள் — எதற்கும் எச்சரிக்கையோடே இரு, நேரமாகிறது—நாங்கள் வருகிறோம்!"

இப்படி அடிகள் கூறிவிட்டு; அஞ்சலையோடு சென்றார்.

அவர்கள் சென்ற பிறகு, வெகு நேரங்கழித்துத்தான் குலசேகரனுக்குத் தமயந்தியின் நினைவு வந்தது.

"அட அட! தமயந்தியைப்பற்றி அவர்களிடம் கூறவேண்டுமென்றிருந்தேனே! சுவடியடிகள் காணாமல் போனதினால் ஏற்பட்ட கலக்கத்தில், அதை மறந்தேபோனேனே! வழியில் தூமகேதுவின்ஆட்களால், அவர்களுக்கு என்ன ஆபத்து ஏற்படுகிறதோ!" என்றெண்ணிக் குலசேகரன் கலங்கினான்.

குலசேகரன் என்ன எதிர்பார்த்தானோ, அது நடந்துவிட்டது!

சிவில்லிப்புத்தூருக்குத் தெற்கே ஐந்துகல் தூரத்திலிருந்த காட்டின் வழியே, இரட்டை மாட்டு வண்டியில், அறிவொளி அடிகளும், அஞ்சலையும் போய்க்கொண்டிருந்தார்கள். அப்பொழுது எதிரே சாலையில் மூன்று குதிரைகள்மீது மூவர் வருவதை அவர்கள் பார்த்தார்கள்.

வண்டியின் அருகே வந்ததும், குதிரைகள் நின்றன. மூவரும் கீழே இறங்கித் தலைதாழ்த்தி, கைகூப்பி, 'வணக்கம் அடிகளே, வணக்கம்!' என்றனர்.

"யாரப்பா நீங்கள்?" என்று கேட்டுக்கொண்டே அறிவொளியடிகள் வண்டியை விட்டுக் கீழே குதித்து, அவர் பக்கத்தில் வந்து நின்றார்.

"நாங்கள் யாரென்று சொல்லவே வாய் கூசுகிறது!" என்றான் அந்த மூவரில் ஒருவன்.

“பரவாயில்லை சொல்லுங்கள், அப்பா!” என்று அன்போடு அடிகள் கேட்டார்.

“நாங்கள் கொலைகாரர்கள்!” என்ருன் ஒருவன் கவலையோடு.

“என்ன, கொலைகாரர்களா?” என்று ஆச்சரியமும், அச்சமும் நிறைந்த குரலில் அஞ்சலை கேட்டுவிட்டு அவர்களை நன்ருக உற்றுப் பார்த்தாள்.

வாட்டசாட்டமான உடலும், கத்தை மீசையும், உருண்டைக் கண்களையும் கொண்ட அவர்கள் உண்மையிலேயே கொலைகாரர்கள், அதிலொன்றும் சந்தேகமே இல்லை என்று அஞ்சலை நினைத்தாள்.

பயங்கரத் தோற்றங்கொண்ட அவர்கள், அடிகளிடம் பணிவோடு நடந்துகொள்கிருர்களே, அது ஏன் என்பது புரியாமல் அவள் திகைத்தாள்.

“நீங்கள் கொலைகாரர்களா!” என்று கொஞ்சமும் அச்சமில்லாமல் அடிகள் புன்னகையோடு கேட்டார்!

“ஆமாம் துறவிகளே, படுபாவிகளான நாங்கள் கொலைகாரர்கள் மட்டுமல்ல, கள்வர்களுமாவோம்?” என்று அந்த மூவரிலே ஒருவன் அடக்கவொடுக்கத்தோடுகூறினுன்.

இவ்வளவுநேரமும் சிறிது தூரத்திலேயே நின்றுகொண்டிருந்த வண்டியோட்டி, மெள்ள அடிகளின் பக்கத்தில் வந்து நின்ருன்.

“கொலைகாரன், கள்வன், காவலன், கற்றறிந்தவன்-சகலரும் எனக்கு ஒன்றே! அது சரி, இப்பொழுது உங்களுக்கு என்ன வேண்டும்?” என்று அடிகள் கேட்டார்.

“ஐயா, நாங்கள் எவ்வளவோ கொலைகள் செய்திருக்கிருேம் எத்தனையோபேரைக் கொள்ளை அடித்திருக்கிருேம்! கொலைசெய்வதும் கொள்ளையடிப்பதும் பாவம், இனி கனவிலும் செய்யாதீர்கள் என்று எத்தனையோ தடவைகள், எத்தனையோ பெரிய பெரிய துறவிகள் எங்களுக்கு உபதேசம் செய்து பார்த்துவிட்டார்கள்! எல்லாம் செவிடன்காதில் ஊதிய சங்காகவே முடிந்தன! மாபெரும் துறவிகளின் அறிவுரைகளையெல்லாம் கேட்டுவிட்டோம்! இப்பொழுது தாங்கள் சிறிய துறவியாக இருந்தாலும், கொஞ்சம் உபதேசம் செய்யுங்கள்! நாங்கள் நல்வழிப்படுகிருேமா என்று பார்க்கிருேம்!” என்று அந்தக் கொலைகாரர்களில் ஒருவன், கைகளைக் கட்டிக்கொண்டு தலையைத் தாழ்த்தி, மிகுந்த மரியாதையோடு கூறினுன்.

ஏதோ குறும்பு செய்யவே அவர்கள் பணிவோடு பேசுபவர்களைப் போல நடிக்கிருர்கள் என்ற உண்மையை அடிகள் புரிந்துகொண்டார். ஆகவே, ‘இப்பொழுது உங்களுக்கு என்னவேண்டும்?’ என்று சிறிது கோபத்தோடே கேட்டார்.

“பார்த்தாயாடா, இந்தத் துறவியின் முகத்தைப் பார்த்தால் படித்தவராகத் தோன்றவில்லை என்று கூறினேனே, கேட்டாயா?”

“இவரது காவியாடையைப்பார்த்தாலே தெரிகிறது, இவர் மலை அளவு படித்திருப்பார் என்று!”

“அதெல்லாம் வெளிவேஷம்! இவருக்குப் படிப்பே கிடையாது!”

“அதெப்படியடா உனக்கு மட்டும் தனியாகத் தெரிந்துவிட்டது, எங்க இரண்டுபேருக்கும் தெரியாமல்?”

“அதற்குத்தான் கொஞ்சம் அறிவுவேண்டும் என்பது! ‘இப்பொழுது உங்களுக்கு என்னவேண்டும்?’ என்று கேட்டாரே இந்தத் துறவி-எப்படிக்கேட்டார்.

“கோபத்தோடு கேட்டார்!”

“கேள்விக்கேற்ற சரியானபதில்! கற்ருேருக்குக் கோபமில்லை என்று ஒரு பாட்டு சொல்கிறது அல்லவா? இவர் கற்றிருந்தால், கோபம் வந்திருக்குமா? அதனுல்தான் நான் சொன்னேன், இவர் முட்டாள் என்று!”

இவ்வாறு குதிரைமீது வந்த அந்த முரடர்கள் மாறி மாறிப் பேசிக் கொண்டதைக் கேட்டு ஆத்திரமடைந்த வண்டிக்காரன், ‘டேய் மரியாதையா பேசுங்க! இல்லாட்டி, அப்புறம் நான் மனிதனுகவே இருக்கமாட்டேன்! ஆமாம்!’ என்று கூறினுன்.

“அட! மரியாதையா பேசாவிட்டால் இவர் மனிதனுகவே இருக்க மாட்டாராமே! இப்போ யாருடா உன்னை மனிதன் என்று ஒத்துக் கொண்டது?” என்று ஒருவன்கேட்டதும் மற்ற இருவரும் ‘கொல்’ லென்று சிரித்தனர்.

‘அஞ்சலை! வண்டியில் போய் ஏறம்மா! இவர்களோடு நமக்கேன் வீண் தகராறு!” என்று அடிகள் சொன்னதும் அஞ்சலை வண்டியின் மீது ஏறக் காலைத் தூக்கி வைத்தாள்.

“கட்டை வண்டியிலே எதற்கு, ‘காற்று வேகத்திலே போகும் குதிரைமீது ஏறம்மா— ஜம்முன்னு போகலாம்!” என்று ஒருவன் அவள் கையைப் பிடித்து இழுத்தான்.

அப்படிப் பிடித்திழுத்தவன் முகத்தில் ஒரு குத்து விட்டான் வண்டியோட்டி! உடனே அந்த வண்டியோட்டியை மற்ற இருவருமாகச் சேர்ந்து அடியடியென்று அடித்து வண்டிச்சக்கரத்தில் கட்டி விட்டனர்.

“வேண்டாம் அப்பா, இந்த அக்ரமம்!” என்று மனம் பதறிச் சொன்ன அடிகளை, ஒருவன் சாட்டையால் அடித்தான். அடியைத் தாங்க முடியாமல் அவர் தரையில் விழுந்துவிட்டார். அப்போதும் அந்த முரடன் நிறுத்தவில்லை அடிப்பதை.

ஆத்திரமடைந்த அஞ்சலை அடிப்பவனின் கன்னத்தில் பளீர் என்று ஓர் அடி கொடுத்தாள். உடனே வேருெருவன் அவளது மலர்க் கரத்தைப் பிடித்திழுத்துச் சென்று அவளோடு குதிரைமீது தாவி ஏறினுன். அக்குதிரை அவ்விடத்தை விட்டு காற்று வேகத்தில் பறந்தது.

(வளரும்.)

"பீட்ல்ஸ்"

இங்கிலாந்து ஏன் அமெரிக்கத் தொடர்புகளிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள நினைக்கிறது? பிரிட்டனின் இந்த ஆண்டு பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ள இராணுவச் செலவினங்கள் எவ்வளவு? ஹெரால்டு வில்சன் மாஸ்கோ செல்வது வர்த்தகக் கண்காட்சியைப் பார்க்கத்தானா, அல்லது சோவியத் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தவா? மாட்சிமை பொருந்திய அரசியார் சமீபகாலமாக அரசியலில் சிறப்பான அக்கறை செலுத்துகிறார் என்பது உண்மைதானா?

என்பன போன்ற கேள்விகளைக் கேட்டால் பதில் சொல்வார்களோ இல்லையோ, ஆனால் பீட்ல்ஸ் குழுவினர் இந்த நிமிடத்தில் எங்கே இருக்கின்றனர்? நேற்று இருந்த இடம் எது? நாளை எங்கே இருப்பார்கள்? சரியாக எத்தனை மணி எத்தனை நிமிடங்களுக்கு உறங்கப்போகிறார்கள்? எப்போது விழிப்பார்கள்? அவர்களுக்குப் பிடித்தமான உணவு எது? உடை என்ன? வண்ணம் எது? என்பன போன்ற கேள்விகளுக்கு இங்கிலாந்தில் உள்ள இள வயதுடையோர், கல்லூரி மாணவ மாணவியரில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர்களிடம் சரியான பதில்களைப் பெறலாம்.

இங்கிலாந்தில் மட்டுமல்ல; அங்குள்ளவர்களைப் போன்ற உலக நாடுகளின் இளைஞர் கூட்டம் முழுமையும் **'பீட்ல்ஸ்'** என்ற நால்வரடங்கிய **இசைக்குழு**வின்பால்ஒருவித வெறித்தனமான பற்றுதலையே வைத்திருக்கிறது.

சென்ற செவ்வாயன்று மணிலாவிலிருந்து புதுடில்லி விமானம் வந்த அவர்களை, இதுவரை வெளிநாட்டுத் தலைவர்கள் யாருக்குமே அளிக்காத ஆரவாரமிக்க முழக்கங்களை எழுப்பி வாழ்த்தி நல்வரவு தெரிவித்திருக்கின்றனர் இளைஞர் கூட்டத்தினர். அவர்களில் பெரும்பாலோர் அந்நிய நாட்டு மாணவர்களாம்!

இலண்டனோ, லாஸ்ஏஞ்சல்சோ, பாரிசோ, ரோமோ, டோக்கியோவோ, வாஷிங்டனோ எங்கே அவர்கள் சென்றாலும் காந்தத்தை நோக்கி இரும்பு கவரப்படுவதைப் போல் இளய வயதுடையோர் அவர்களை நோக்கி மொய்க்கின்றனர்.

கடந்த ஆண்டு இங்கிலாந்துப் பிரதமர் வில்சன் இந்த இசைக் குழுவினருக்கு அந்நாட்டைச் சேர்ந்த சிறப்பு விருதுகளில் ஒன்றான O. B. E. என்ற பெருமையை அளித்தபோது அரசியல் உலகத்தில் ஒருவகையான கசப்பு தெரிவிக்கப்பட்டது. ஆனால் அதையும் பின்னுக்குத் தள்ளும் வகையில் இளவரசி மார்க்கரெட் திரைப்படம் ஒன்றின் துவக்க விழா நிகழ்ச்சிக்கு பீட்ல்ஸ் குழுவினரின் நாகரிகத்தில் உடை அணிந்து வந்தபோது ஒரு கருத்து எதிர்ப்பே தெரிவிக்கப்பட்டது.

ஆக்ஸ்போர்டு பட்டதாரிகள், அரசகுடும்பத்து சார்லஸ், டவுனிங் தெரு பத்தாம் எண் மனையில் பணிபுரிவோர், வெள்ளை மாளிகை அதிகாரிகள் இப்படிப் பலதரப்பட்ட 'விசிறி'கள் இந்த இசைக் குழுவினருக்கு.

இவர்களுக்கென்றே உள்ள உடைப்பாங்கு — தலைமுடி வாரிவிடும் பக்குவம் ஆகிய இரண்டும் இளைஞர்களைச் சொக்கவைத்துவிடுகிறது. 'டோபாக்'கள் என்று சொல்லும் இவர்களது 'கிராப்பு'களைப்போல் உள்ள செயற்கை முடிகள் ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா எங்கும் பெறமுடியாத வியாபாரப் பொருள். இதைத் தயாரித்தளிக்கும் தொழிலில் சேனு சம்பாதிக்கும் அயல் நாட்டு செலாவணி தேசிய வருமானத்தில் கணிசமான ஒரு பங்காகும்.

கோதி வாரிவிடப்படாத நீண்ட முடிகளைக் கொண்ட தலை—அழுக்கேறிய மடிப்பில்லாத உடைகள்—பழுதடைந்தவைபோல் காணப்படும் பழைய வாத்தியக் கருவிகள்—ஆட்டத்துக்கும் நாட்டியத்துக்கும் உடனடி இரசனையை விளைவிக்கக்கூடிய மெல்லிசைகள் இப்படி இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன் மிகச் சாதாரணமாக தொழிலில் இறங்கிய இக்குழுவினர்களை இப்போது உலக இளைஞர்கள் விடுவதாயில்லை!

உலக அரங்கில்

"உனது கரம்பிடிக்க விழைகிறேன்" என்ற இவர்களது இசைத் தட்டு ஒன்று ஏழு நாட்களில் பத்து இலட்சம் விற்பனையாகியுள்ளது.

'பீட்ல்ஸ்' குழுவினர் உலக இளைஞர்களில் ஒரு பகுதியினரைத் தங்தன் பிடியில் போட்டிருக்கின்றனர் என்று வருத்தப்படுகிறார் இலண்டன் கிழவர் ஒருவர்.

ஜான் லென்னன், ஜார்ஜ் ஹாரிசன், பால் மக்கார்ட்னி, ரிங்கோ ஸ்பார் என்ற 'பீட்ல்ஸ்' குழுவின் நான்குபேருமே 25-வயதுக்குட்பட்டவர்கள். இங்கிலாந்து முழுமையிலும் பார்த்தால்கூட இந்த குழுவினருக்கு இருக்கும் ஒரு "தனிப்பட்ட செல்வாக்கு" வேறு எந்த அமைப்புகளுக்கும் இல்லை என்று கூறலாம்.

அவ்வளவாக அறிமுகமாகாத இந்தியத் தலைநகரிலேயே வந்து இறங்கியது முதல் திரும்பவும் விமானம் ஏறும் வரையில் இளைஞர் கூட்டம் அவர்களது நடவடிக்கைகளையே நிறுத்தும் அளவுக்கு நெருக்கியிருக்கிறதென்றால் இங்கிலாந்தில், ஐரோப்பிய நாடுகளில், அமெரிக்காவில், டோக்கியோ போன்ற சர்வதேச நகரங்களில் இக்குழுவினருக்கு இருக்கும் விசிறிகளைக் கற்பனை செய்துகூடப் பார்க்கமுடியவில்லை.

இங்கிலாந்தின் பழமையான இசைக்கே தொடர்பில்லாமல் தங்களுக்கென தனி வகையை வகுத்துக்கொண்டிருக்கும் இவர்கள் இங்கே வந்தபோது "இந்திய இசைகளிலும் எங்களுக்கு நாட்டம் உண்டு" என்று கூறியிருக்கிறார்கள்.

உலகம் பூராவிலும் பரவலாக—கண்மூடித்தனமானது என்று அழைக்காவிட்டாலும் — ஒருவித வெறித்தனமான பின்பற்றுதலைத் தெரிவிக்கும் — இளைஞர் சமுதாயத்தைத் தங்கள் பின்னே பெற்றிருக்கும் 'பீட்லஸ்' குழுவினர் அவர்களுக்குக் காட்டும் நன்றியாக நல்ல பல வழிகளில் பயன்படலாம்.

— எஸ். ஆர்.

பூசிய கரியைப் போக்கிடவில்லையே!!

8-ம் பக்கத் தொடர்ச்சி

குட்டுப்பட்டார்! குனிந்து கொடுத்தார்! இவர் கிளம்புகிருர் கழகத்தை இழித்தும் பழித்தும் பேச!

தன் நேர்மை, நாணயம், தகுதி திறமை, வயது அனுபவம் ஆகிய எதற்கும் லால்பகதூர் மதிப்பளிக்க மறுத்துவிட்டாரே என்பதை எண்ணி எண்ணி, வெட்கம் விலாவைக் குத்திடும் மற்றவர்களுக்கு; இவர் கிளம்புகிருர், கழகத்தைத் தாக்கிட!!

காட்டுவதுதானே இந்த வீராவேசத்தை லால்பகதூரிடம்! கேட்பதுதானே அவரை, எனக்குப் பதவி பெரிது அல்ல! இதோ விலகிவிட்டேன். என்மீது எவனெவனே செய்த புகார் பற்றி என் வார்த்தையை நம்ப மறுத்துவிட்டீர்கள். இருக்கட்டும். நான் மாசு மருவற்றவன் என்பது நாட்டுக்கு விளக்கப்பட்டாக வேண்டும், ஆகவே விசாரணை நடத்துங்கள், உண்மை துலங்கட்டும், என் நேர்மையும் நாணயமும் உலகுக்கு மெய்ப்பிக்கப்பட வேண்டும் என்று கூறுவதுதானே! அதற்குக் கிளம்பக் காணேம் ரோஷத்துடன், இப்போது கழகத்தைத் தாக்கத் தோள் தட்டிக் கிளம்புகிருர்.

லால்பகதூர், இவர் முகத்தில் பூசிய கரியை நாடு அறியாதா! இவர் பதவி விலகியது இது இரண்டாவது முறை—இரு முறையும் புகார் கிளம்பிய பிறகே இவர் பதவியை விட்டு விலகினர் என்பதனை நாடுஅறியாதா!

மூக்கறுபட்டோம், நாலு பேர் கண்களிலே படாமல் மூலையில் உட்காருவோம் என்று 'சராசரிகள்' எண்ணிக் கொள்ளட்டும், நாம் அப்படியா! பெரிய ஆசாமி அல்லவா என்ற நினைப்புடன் கிளம்பிவிட்டார்!

காமராஜர் இவரிடம் சொன்னராம், 'போய்ப் பார்த்து வாரும், நாடு எப்படி இருக்கிறது; ஓட்டு எப்படிக் கிடைக்கும்' என்பதுபற்றி.

காமராஜர் போகாத இடமா, பார்க்காத நிலைமையா, போடாத கணக்கா! அவருக்குப் புரியாததா இவருக்குப் புரியப்போகிறது. காமராஜர்தான் என்னை அனுப்பிவைத்தார் என்று இவர்தான் சொல்லுகிருர்; காமராஜர் வாய் திறந்து இதுவரை சொல்லவில்லை, நான்தான், டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரை அனுப்பி வைத்திருக்கிறேன் என்று.

அவர் சொல்லுவாரா? இவர் முகத்தில் லால்பகதூர் கரியைப் பூசியபோது, வாய் திறந்து, 'ஐயோ! பாவம்! என்று ஒரு வார்த்தை அன்பாக, ஆதரவாகப் பேசவே இல்லையே அந்தக் காமராஜர்.

அவர் இப்போதா வாய் திறந்து, ஊர் நிலவரம் அறிந்துவந்து கூறிடும் என்று இவரிடம் சொல்லியிருப்பார். இவர் சொல்லிக் கொள்கிருர் அப்படி!!

லால்பகதூருக்குப் பிறகாகிலும், 'புகார் மனு' அபத்தமானது, தள்ளுபடி செய்தாகிவிட்டது என்ற 'நல்ல செய்தி' தரப்பட்டதா? இல்லையே!

இந்திரா காந்தியார், என்ன கூறினர்? டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் நேர்மையும் நாணயமும் நாடு அறியும். அவர்மீது யாரோ அபத்தமான புகார் செய்தனர். அதனைத் தள்ளுபடி செய்துவிட்டேன் என்று கூறினரா? இல்லை! டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டதால், புகார் மனு பற்றி மேற்கொண்டு கவனிக்கத் தேவை இல்லை என்று முடிவு செய்துள்ளேன் என்று மட்டுமே கூறினர்!

இது பெருமைக்குரிய நிலையா?
பேதையும் கூறிடான்!

ஆனல் இந்த மேதை ஏதோ தமது கீர்த்தி கொடி கட்டிப் பறப்பதாகக் கருதிக்கொண்டு கிளம்புகிருர் கழகத்தைத் தாக்கிட.

கழகம் ஆட்சி நடத்தினல், பெண்கள் நகைபோட்டுக்கொண்டு ஊரிலே உலவ முடியாதாம்!

கேட்டனையா இந்தப் பேச்சை! என்ன அறிவுத் தெளிவப்பா இந்த அனுபவசாலிக்கு!

கழகம் ஆட்சி செய்தால், பெண்களை வழிமறித்துப் பொருளைக் களவாடுவார்களாம்! நகைகளைப் பறித்துக்கொள்வார்களாம். அப்படிப்பட்ட காலித்தனம் நடக்குமாம்! அவ்வளவு அராஜகம் இருக்குமாம்!

இவ்வளவும் எந்த ஆராய்ச்சிமூலம் இவருக்குக் கிடைத்திருக்கிறது? கூறக்காணேம்.

கழகத்தைப்பற்றி இத்தகைய இழிவான கருத்தைக் கொண்டிருப்பின், சென்ற தேர்தலின்போது 30-இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் ஆதரவுகாட்டி, ஓட்டு அளித்திருப்பார்களா? என்று கேட்டால் என்ன பதில் அளிப்பாரோ இந்த அறிவுக்காசர்!

சட்டத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள எதிர்க்கட்சியாக, தமிழகத்தில் கொலுவிருக்கும் ஒரு அரசியல் கட்சியைப்பற்றி இத்தனைப் பெரிய பதவிவகித்தவர் இப்படியா பொறுப்பற்ற முறையில் பேசுவது! இது தானு காங்கிரஸ் காட்டும் ஜனநாயகம்?

கழகத்தின் கொள்கைத் திட்டம் குறைமிக்கது என்று வாதிடட்டும் — அறிவுத் தெளிவுடன்.

அறிவு அற்றவர்கள் பேசுவதுபோல, கழகத்திற்குக் கொள்கை இல்லை, திட்டம் இல்லை என்ருகிலும் குளறட்டும். கழகம் ஆட்சிக்கு வந்தால், வழிப்பறி நடக்கும்—பெண்களின் நகை பறிபோகும் என்ரு பேசுவது.

ஆணவத்துக்குக்கூட ஒரு வரம்பு வேண்டாமா?

ஆளுங் கட்சி, ஆகவே நாக்கு எந்த அளவும் நீளலாம் என்ரு கருதுவது?

நாடாளும் கட்சியினர் நாங்கள், ஆகவே நாராச நடையில்தான் பேசுவோம் என்ரு போக்கு இருப்பது.

இருந்ததை இழந்த எரிச்சலா? வருத்தமா?

சே! இத்தனை இழிநடையா!

பதவி பறிபோய்விடுமோ, பசையும் ருசியும் கெட்டு விடுமோ என்ற கவலை எவ்வளவு தரக் குறைவான பேச்சையும் கொட்டச் செய்கிறதே! எதைச் சொல்லியாவது கழகத்தை இழிவுபடுத்த வேண்டும், எரிச்சல் மூட்டவேண்டும் என்ற நினைப்பு நெளிந்திடக் காரணம் என்ன? கிலி! அச்சம்! பதவி பறிபோய்விடுமோ என்ற பதைப்பு

பெண்களின் நகை பறிபோய்விடும் என்று பேசினால் மக்கள் பீதி அடைவார்கள், கழகத்தை ஆதரிக்க மறுப்பார்கள் என்று எண்ணுகிறார் இவ்வளவு படித்தவர்! ஏமாளியும் அவ்விதம் எண்ணிட மாட்டானே!

காந்தியார் காலத்திலேயே இந்திப் பிரசார விடுதியில், விபசாரம் நடைபெற்றதாகப் புகார் வந்ததே! நாடு அறியாதா அதனை.

திங்கள் சில தானே ஓடியுள்ளன, ஒரு காங்கிரஸ் அமைச்சர் மீது ஒரு மாதிடம் வம்பு செய்ததாகப் புகார் கிளம்பி. நாடு மறந்துவிட்டதா!

குடித்துப் புரளுவதும் மனைவியை அடித்துக் கொடுமை செய்வதுமாக இருந்தார் என்ற புகார் கிளம்பியது யார் மீது? ஒரு காங்கிரஸ் அமைச்சர் மீது அல்லவா?

குடித்துவிட்டுப் புரளும் காங்கிரஸ் தலைவர்கள் உள்ளனர் என்று மொரார்ஜிதேசாயே கூறினாரே சென்ற ஆண்டு! நாடு மறந்துவிட்டதா? என்ன நினைப்பிலே பேசுகிறார்? இருந்ததை இழந்துவிட்ட எரிச்சலிலா? இடிபட்ட வருத்தத்திலா? ஒரு முறைக்கு இரு முறை புகார் தாக்கியதாலா? இப்படியா, மற்ற ஜனநாயக நாடுகளிலே பேசுகிறார்கள்.

கழகம் ஆட்சிக்கு வந்தால், வழிப்பறி நடத்திடும் என்ற இழி மொழி பேசிடுகின்றாரே இந்த மூதறிஞர், இவருடைய காங்கிரஸ் கட்சி ஆட்சி நடத்தும் நாட்களில்தானே, டில்லியில் மூதியவர், நீதிபதி வேலை பார்த்தவர், அவருடைய வீட்டிலேயே கொலை செய்யப்பட்டார்! காங்கிரஸ் ஆட்சி நடந்து கொண்டிருக்கும் நாட்களில்தானே கெய்ரோன் சுட்டுக் கொல்லப்பட்டார்! காங்கிரஸ் ஆட்சி நடந்து கொண்டிருக்கிற போதுதானே கொள்ளைக்காரக் கூட்டம் மத்தியப் பிரதேசத்தில் கொட்டமடித்த படி இருக்கிறது.

கொள்ளைக்காரத் தலைவர்களிலே ஒருவன் காங்கிரஸ் தலைவர் ஒருவரை அழைத்து, காங்கிரசின் தேர்தல் நிதிக்குக் கணிசமான தொகை நன்கொடை தந்தான் என்று சில காலத்துக்கு முன்பு செய்தி வெளிவந்ததே; நாடு மறந்துவிடுமா?

மக்கள் ஏதுமறியாதவர்கள், அவர்களிடம் எதனையும் கூறிடலாம், நம்பிவிடுவார்கள் என்ற நினைப்புடன் நாப்பறை நடாத்திடுகின்றனர்; மக்கள் தெளிவு பெற்றுவிட்டுள்ளனர் என்ற உண்மை அறியாது.

கழகம் ஆட்சிக்கு வந்தால், வழிப்பறி நடக்கும் என்று இழிமொழி பேசுகிறார் இந்தப் பெரியவர்; ஆனால் தம்பி! காங்கிரஸ் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறதே இப்போது, பஞ்சமாபாதகம் எந்த வகையிலே இருக்கிறது என்பதுபற்றி ஒரு சிறு கணக்குக் கொடுக்கவா! இதோ!!

தம்பி! மற்றக் கட்சிகள் ஆட்சிக்கு வந்தால் பஞ்சமாபாதகம் தலைவிரித்தாடும் என்று பேசுகிறாரே மகானுபாவர், இவருடைய காங்கிரஸ் கட்சி ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் இந்த நாட்களில், ஒரு ஆண்டில் நடைபெற்றதாகக் கணக்கு எடுக்கப்பட்டிருக்கும் குற்றங்களின் தொகை எவ்வளவு தெரியுமா? 6,74,466!

ஆறு இலட்சத்துக்கு மேற்பட்ட கொடிய குற்றங்கள் தலைவிரித்தாடியிருக்கும் நிலை இந்த ஆட்சியில். இதிலே இருந்தவர் கதைக்கிறார் கழகம் ஆட்சிக்கு வந்தால் குற்றம் தலைவிரித்தாடும் என்று. அவ்வளவு நாகரிகமாகக்கூடப் பேசத் தெரியாததால், குளறி இருக்கிறார், நகை போட்டுக்கொண்டு பெண்கள் ஊரிலே உலாவ முடியுமா என்று.

எவ்வளவு அக்கறை, நகைபற்றி!!

இவ்விதம் பேசியவர் சொந்தம் கொண்டாடும் கட்சி ஆட்சி நடத்திடுகிறது, குற்றங்களோ ஆறு இலட்சத்துக்கும் மேல்! விவரம் வேண்டுமா தம்பி! தருகிறேன்.

கொலை	**— 11,586**
பெண்ணைக் கடத்திச் சென்றகுற்றம்	**— 7,119**
கொள்ளை	**— 4,890**
வழிப்பறி	**— 7,551**
கன்னம்வைத்துக் களவாடியது	**—1,34,324**
ஆடு, மாடு களவு	**— 23,122**
களவு	**—2,29,331**
கலகம்	**— 29,096**
நம்பிக்கைத் துரோகக் குற்றம்	**— 18,092**
மோசடி	**— 9,738**
கள்ளநாணயம் தயாரித்தல்	**— 423**
பலதரப்பட்ட குற்றங்கள்	**—1,99,194**

தம்பி! ஒரு ஆண்டுக் கணக்கு! இந்த இலட்சணத்திலே இவர்கள் தர்பார் நடத்தும் நாட்டில் இருக்கிறது. இவர் வாயோ நீளுகிறது; வார்த்தையோ நாராசமாகிறது.

தம்பி! நான் தந்துள்ள கணக்கு 1962ம் ஆண்டுக்கானது. அந்த ஆண்டிலே என்ன காரணத்தாலோ குற்றங்களும் கொடுமைகளும் அதிக அளவிலே இருந்தன போலும், காங்கிரசின் மாபெருந் தலைவர்கள் உபதேசம் செய்யச் செய்ய, அந்தக் குற்றங்கள் குறைந்துகொண்டு வந்துள்ளன போலும் என்று எண்ணிக் கொண்டுவிடாதே! வளர்ந்தபடி இருக்

முகப்பில்....

வில்லுக்கு நாணேற்றி வீரம் காட்டல்
வில்லாளன் வேலூர்மா காடு தன்னில்
சொல்லுக்கு நாணேற்றல் போலும்! அண்ணா
சொல்லுக்கு ஏதுவமை! தலைமை ஏற்றால்!!

நெல்லைநக ராட்சியது நெடிய காழ்ப்பில்
நிலை குலைக்கப் பட்டாலும் நெஞ்சு தூக்கி
இல்லையினி இக்கொடுமை! இந்த நாட்டில்
இல்லைதுயர் என்றுமகிழ்ந் தழைக்கின் றாரே!

கிறது என்று சர்க்கார் அறிக்கையே தெரிவித்திருக்கிறது.

1965ம் ஆண்டில், மூன்றே மாதங்களில், குற்றங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்ற கணக்கைக் கூட சர்க்கார் தந்திருக்கிறது.

மூன்றே மாதங்களிலே, தம்பி! காங்கிரசின் புனிதமான ஆட்சியிலே ஒரு இலட்சத்து எண்பத்து மூன்றுயிரம் குற்றங்கள்! வகையும் வேண்டுமா? பார்த்துக் கொள்வேன்.

கொலை	—	3162
பெண் கடத்தல்	—	1873
கொள்ளை	—	1133
வழிப்பறி	—	1910

இது 1965-ம் ஆண்டில், மூன்று மாதத்துக் கணக்கு. 1961-ம் ஆண்டு, மூன்று மாதத்துக் கணக்குடன் இதனை ஒப்பிட்டுப் பார்ப்போமா? இவர்கள் ஆட்சி காரணமாகப் புனிதத் தன்மையும் ஒழுக்கமும் எந்த அளவு வளர்ந்திருக்கிறது (!) என்பது விளங்கிவிடும்.

		1961		1965
		(3 மாதம்)	—	(3 மாதம்)
கொலை	—	2792	—	3162
பெண் கடத்தல்	—	1674	—	1873
கொள்ளை	—	1053	—	1133
வழிப்பறி	—	1607	—	1910

இப்படி வளர்ந்திருக்கிறது கொலையும் கொள்ளையும், பெண்களைக் கடத்திச் செல்லும் கொடுமையும், காங்கிரஸ் ஆட்சிநடத்திக்கொண்டிருக்கும் நாட்களில். இதற்காக வெட்கப்படாமல், வாயில் வந்ததைப் பேசுகிருர், பெரிய இடத்தில் இருந்தவர்.

காங்கிரஸ் ஆட்சியிலே கொலையும் கொள்ளையும் கற்பழித்தலும் வழிப்பறியும் போன்ற கொடுமைகள் வளர்ந்துகொண்டே போகின்றன; நாம் 'பண்பு' காரணமாக இதனை எடுத்துக் காட்டிடவில்லை; இதற்காக இந்த ஆட்சியை இடித்துரைக்கவில்லை. ஆனுல் பாரேன் அந்த இடத்துப் பேச்சு எவ்வளவு தரம் கெட்டதாக இருக்கிறது என்பதனை.

கொலையும் கொள்ளையும், வழிப்பறியும் களவும், பெண்ணைக் கடத்திச் செல்வதும் கன்னம் வைப்பதும், மோசடியும் பிற பாதகங்களும், இவ்வளவு நடந்துள்ளன. இவைகளையா காட்டுகிறேம், காங்கிரசாட்சியைக் குறை கூற! நமக்கு இல்லை அத்தகைய இழி தன்மையான போக்கு!

நாம் ஆட்சிக்கு வந்துவிடுவோம் என்ற கிலி பிடித்ததும் பார் தம்பி! எத்தனை இழிமொழியைப் பொழியத் தோன்றுகிறது, இருப்பது பறிக்கப்பட்டுவிடும் என்ற எரிச்சல் காரணமாக.

ஆனுல், தம்பி! அவர்கள் எத்தனை இழிமொழி உமிழ்ந்திடினும், நாம் நமது தரம் குறையாமல் நமது சொல்லையும் செயலையும் அமைத்துக்கொள்ள வேண்டும்.

எருமைகள் சேற்றில் புரளும்–அதனைக்
கண்டும் ஆறறிவினர் அருவியில்தான் நீராடு
கின்றனர்.

தமிழ் நாட்டில் தனிச் சிறப்புடன் விளங்குவது

ஜெயா பார்மஸி H.O. பெரியகுளம்

சர்க்காரால் அங்கீகாரம் செய்யப்பட்டது.

(Recognised by Central Board of Indigenous Madicine Madras)

பொதுமக்கள் ஏமாற்றமடையாதிருக்க, எங்களது மருந்துகளை வாங்கும்போது, ஜெயா பார்மஸி H. O. பெரியகுளம் என்பதையும் லேபிளில் உள்ள முத்திரையையும் கவனித்து வாங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

JEYA

பிராஞ்சுகள்:

51, Dr. நடேசன் ரோடு, சென்னை-5.
51, செஞ்சி ரோடு, திண்டிவனம்.
17, நெல்கடைத் தெரு, மாயவரம்.
2 வள்ளிமால் தெரு (சிங்காரத்தோப்பு எதிர்) பெரியகடை வீதி, திருச்சி-8.
28 நெத்திமேடு, கோயம்புத்தூர் ரோடு, சேலம்-2
208 ஒப்பணக்காரத்தெரு கோயம்புத்தூர்
63, மார்க்கட் ரோடு, தஞ்சாவூர்.
47A, கன்னம்மாள்கோயில்தெரு திருநெல்வேலி ஜங்.
மற்றும் தமிழகமெங்கும் ஏஜண்டுகள்.

புதிதாக ஏஜன்ஸி வேண்டுவோர், தலைமை நிலையத்திற்கோ, பிராஞ்சிற்கோ விண்ணப்பிக்கவும்.

உரிமையாளர்: J. M. ராஜன், ஜெயா பார்மஸி, மதுரைரோடு திண்டுக்கல்.
போன்: 348, 348-A, 438.

Regd. No. M. 7894

கழுகு அழுகிய பிணத்தைக் கொத்தித் தின்கிறது! கிளி, கொவ்வைக் கனியைத்தான் விரும்புகிறது!

புளித்த காடியைப் பருகுவான் குடிகாரன்; செவ்விளநீர் தேடுகிறான் பண்பாளன்.

எவர் எத்தகைய இழிமொழி பேசிடினும் தம்பி! நீ கானம்பாடிடும் வானம்பாடியாகவே இருந்திடல் வேண்டும்.

பண்புமறந்து, கண்ணியமற்று, காழ்ப்புக் காரணமாக, ஆளவந்தார்கள் என்னென்ன இழிமொழி பேசுகின்றனர் என்பதை எண்ணிடும்போது தம்பி! நாம் மேற்கொண்டுள்ள காரியத்திலே வெற்றிகிடைத்திட மேலும் உறுதியும் ஊக்கமும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

யாராரோ வீசிடும் இழி மொழிகளை, பழிச்சொற்களை, எல்லாம் கேட்டுக்கொண்டுதான் ஆகவேண்டுமா அண்ணா! என்று கேட்பாயேல், தம்பி! தயக்கமின்றிக் கூறுவேன், கேட்டுக்கொள்ளத்தான்வேண்டும். நாட்டுக்கு நல்லாட்சி அமைத்திட நாம் இந்த 'விலை' கொடுத்தாகவேண்டும்.

தம்பி! பாம்பும் மயங்கிடும் என்கிறார்கள், புல்லாங்குழல் இசை கேட்டிடின்! அந்தக் குழல் எப்படித் தயாரிக்கிறார்களாம் தெரியுமா? சூட்டுக்கோலால் துளை போட்டு!! தீயால் சுடுகிறார்கள்; பிறகு தீஞ்சுவை இசைதரும் குழலாகிறது!! சுடுசொல் நம்மீது வீசுகிறார்கள்! வீசட்டும்!

அண்ணன்,



4-ம் பக்கத் தொடர்ச்சி

வலதுசாரி கம்யூனிஸ்டு கட்சியின் சேலம் மாவட்டத் தலைவர், சேலம் உருக்காலைப் பிரச்சினை குறித்து காங்கிரஸ் சர்க்கார் கொண்டுள்ள போக்கினைக் கண்டித்திருக்கிறார். வரவேற்கிறோம். பாராட்டுகிறோம்.

இது எல்லா எதிர்க்கட்சிகளும் ஒன்றுபட்டு நின்று போராடித் தீரவேண்டிய பிரச்சினையாகும்.

இதற்கான முயற்சிக்கு முழு ஆதரவு அளிக்கவும் மற்றக் கட்சிகள் இசைவு அளித்திடின் முன்னின்று கிளர்ச்சி நடத்திடவும் தி. மு. கழகம் ஆர்வத்துடன் இருக்கிறது என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

எனவே காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை எதிர்த்துப் போராடி வெற்றிபெற்று, நாட்டுக்கு ஒரு நல்லாட்சி அமைத்திடும் கடமையில் ஆர்வமும் தீவிரமும் காட்டிட, அணிதிரள வேண்டுகின்றோம்.

அந்தப் போரணி திரண்டாலன்றி காங்கிரஸ் ஆட்சியின் ஆணவப்போக்கு அழிந்துபடாது.

எனவே காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை எதிர்த்துப் போராடுவது, எதிர்க்கட்சிகள் தமக்காக செய்துகொள்ளும் செயல் என்று கருதாமல், நாட்டுக்காகச் செய்து தீரவேண்டிய கடமை என்ற உணர்வுடன் ஒன்றுபட வேண்டுகிறோம். ஒன்றுபட்டால் உண்டு புதுவாழ்வு.

"காஞ்சி"

இரண்டாம்

ஆண்டு மலர்

அண்ணாவின்

அரிய பல படைப்புக்களுடன்,

கழக முன்னணியினரின் கருத்தோவியங்களும் மிளிர

அறிவுக் களஞ்சியமாய்த் தயாராகிறது.

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பித் தெரு, உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.